# தென்மொழி

## அடிப்படையை விளைவிக்க!

ஊருக்கொன் றுய்ச்சிலையை ஊன்றுதலால்,
விழாக்களினால், உலகம்காணத்
தேருக்குள் அமர்ந்த வண்ணத் தோரணங்கள்
தலையிடிக்குந் தெருவலத்தால்,
ஆருக்கிங் கென்னபயன்? எத்தனையாண்
டவைநிற்கும்? ஆக்கங்காணும்
வேருக்குள் அன்றோநீர் விடல்வேண்டும்!
அடிப்படையை விளைத்தல் வேண்டும்!

பார்ப்பனரைக் குறைகூறிப் பயனில்லை;
நம்மவர்கள் பரந்து செய்யும்
ஆர்ப்பாட்டம் மிகப்பெரிதே! அளப்புகளோ
இனும்பெரிதே! அறியா மைக்குள்
போர்ப்பாட்டும் புகழ்ப்பாட்டும் பாடுவதால்
பயன்வருமோ? பொதுமை நாடும்
ஊர்ப்பாட்டுக் காரரெல்லாம் உளப்பாட்டோ
டுண்மையராய் உழைத்தல் வேண்டும்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

www.thamizham.net - Free E book No 7454

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 409 :** தென்மொழி உறுப்பினர்களுள் நானும் ஒருவன். தென்மொழி இதழ் சுவடி-11 ஓலை 12-ஐப் பெற்று முகப்பு அட்டையைத் திறந்ததும் எனக்கு மிகுந்த திகைப்பும், வருத்தமும் ஏற்பட்டது. காரணம் தாங்கள் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ள "உங்கள் மேல் ஒரு குற்றச்சாட்டு" எனும் மடல்தான்! அந்த மடலினை எழுதிய கோவை நண்பர் உணர்ச்சி வயப்பட்டு எதையோ கிறுக்கிப் பிதற்றியுள்ளார். அவர் தம் மடலில் மறைந்த தமிழக முதல்வர் திரு. அண்ணாத்துரை அவர்களை தாழ்ந்த சொற்களால் தாக்கி எழுதியுள்ளார்.

தி. மு. க. தலைவர் அண்ணாத்துரை தமிழகத்திற்குச் செய்த கேடுகள் பல என்று அந்த நண்பர் எழுதியுள்ளார். நான் அந்த நண்பரைக் கேட்கிறேன். என்ன கேடுகளைத் திரு. அண்ணாத்துரை தமிழகத்திற்குச் செய்து விட்டார்? பார்ப்பனியத்திற்கும், வட இந்தியனுக்கும் அடிமைப்பட்டுக் கிடந்த பேராயக் கட்சியினர் ஆட்சி செய்த தமிழ்நாட்டைப் பேராயக் கட்சியினரிடமிருந்து மீட்டு முதலமைச்சராக இருந்து ஆட்சி செய்தது குற்றமா? தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பயின்ற மாணவராம் திரு. அண்ணாத்துரை அவர்கள் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராகப் பணியாற்றியது குற்றமா?

மேலும், கோவை நண்பர் அறிஞர் அண்ணாத்துரையை 'புருட்டசு' என்றும், 'தமிழ் இனத்தையும், நிலத்தையும் அடகு வைத்துவிட்டுப் போய் விட்டான்' என்றும். 'இளைஞர் அறிவுமுனைகளை மழுங்கச் செய்து விட்டான்' என்றும், 'தாயகத்தின் விடுதலைக்குச் சாவுமணி அடித்தவன் அவனே' என்றும் மதிப்பற்ற முறையில் சாடியுள்ளார். 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று சொல்லி தம்மைத் தூற்றியவரையும் தூற்றாமல் மதிப்புக் கொடுத்த அந்த நல்ல உள்ளத்தைக் கோவை நண்பர் இழிவான மதிப்பற்ற முறையில் சாடியுள்ளது மிகவும் கொடுமை! தமிழ் இனத்தையும், நிலத்தையும் அறிஞர் அண்ணாத்துரை எந்த மார்வாடிக் கடையில் அடகு வைத்தாரோ தெரியவில்லை. தாயகத்தின் விடுதலைக்கு அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் எங்ஙனம் சாவுமணி அடித்தாரோ தெரியவில்லை. இளைஞர் அறிவு முனைப்புகளை அவர் எங்ஙனம் மழுங்கச் [...]தார் என்பதும் அறியேன். இவையெல்லாம் கோவை நண்பரின் [...]ளத்தில் தோன்றிய சிறந்த அரசியல் கற்பனை என்று எண்ணு[...]றன். அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் சிறந்த ஒரு பேச்சாளர், [...]த்தாளர், குமுகாயச் சீர்திருத்தக்காரர், பகுத்தறிவாளர் [...]ன்பர் என்பனவற்றையும், எதிர்க்கட்சிக்காரர்களும், கட்சிச் [...]ற்ற அரசு அலுவலங்களில் பணிபுரியும் அலுவலர்களும், [...]ின் அறிவாற்றலை மதித்தனர் என்பதையும் கோவை நண்பர் [...]ர்ப் பார்க்கவில்லை.

அறிஞர் அண்ணாத்துரை அவர்களுக்குப் பரிந்து கொண்டு இம் [...]ழுதியதால், என்னைத் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவன் என்று

www.thamizham.net - Free E book No 7454

" கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

**சுவடி: 12. ஓலை: 1.**

தென்மொழி

துலை-தி. பி. உ00௫ - (அக்.-நவ.-1974.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழியின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.


### நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்ருக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுருது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானுல், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

# மத உரிமைகளும் அரசின் கடமைகளும்



ஆளுமை நிலையில் அரசுக்கு எத்தனையோ கடமைகள் உண்டு; பொறுப்புகளும் உண்டு. அவற்றுள் சட்டத்தால் வழங்கப் பெறும் பொதுவுரிமைகளை மக்களில் ஒரு பகுதியினர் பயன்படுத்தும் பொழுது அவற்ருல் அதே மக்களில் மறுபகுதியினர்தம் உரிமைகளுக்கு ஊறு நேரா

www.thamizham.net - Free E book No 7454

வண்ணம் கண்காணிப்பதும் அதன் தலையாய கடமைகளில் ஒன்று. இப்படிக் கண்காணிப்பதில் தவறு நேருமானால், அல்லது சட்டம் இடங் கொடுக்கும் வகையிலேயே புறக்கணிப்பு நிகழுமானால், மக்களில் சிலர் தங்களின் உரிமைகளைப் பயன்படுத்தி மகிழ்கின்ற அதே நேரத் தில், வேறு சிலர் அவற்றால் துன்பப்படவும் நேர்ந்து விடுகின்றது. இதை விளக்க ஆங்கிலத்திலே கையாள்கின்ற ஓர் உவமையை இங்குக் கூறலாம். "ஒருவர் கைவீசிக் கொண்டு நடப்பதில் யாருக்கும் தடையிருக்க முடியாது; ஆனால் அவர் கைதான் இன்னொருவர் மூக்கில் பட்டுவிடக் கூடாது"

பொதுவாக ஒரு குடியரசு நாட்டில், அதுவும் குறிப்பாக இந் நாட்டில், மதங்களுக்கு வழங்கப் பெறும் உரிமைகள், சலுகைகள் இப்படி அளவுக்கு மீறின வகையில் இருப்பது, மக்களுக்கு அரசு விளை விக்கும் பிறவகை நலன்களுக்கு ஓர் இடையூறாகவே இருக்கிறது. மதம் ஒரு கொள்கை அல்லது ஒரு கடைப்பிடியாக இருக்கலாம். ஆனால் அது சட்டமாக்கப்பட்டு விடக்கூடாது. அரசு ஆளுமைகளில் அது குறுக்கிடவே கூடாது. இதனால்தான் உருசியா போலும் பொது வுடைமை நாடுகளில் மதங்களுக்கு இடம் கொடுத்தாலும் அரசாளு மையில் அவற்றைத் தலையிடா வண்ணம் தடைப்படுத்தியுள்ளனர். அதனால்தான் அவர்களால் பல நல்ல விளைவுகளைச் செய்ய முடி கின்றது. ஆனால், அவ்வாறு இவ்விந்திய நாட்டின் சட்டம் அமையா மைக்குக் கரணியம், இதனை உருவாக்கிய எழுவரில் ஐவர் பார்ப்பனர். எனவே, தங்கள் வாழ்க்கையின் எல்லாக் கூறுபாடுகளுக்கும் மதமே துணையாக இருக்கின்ற அந்தத் தன்மையினை அவர்கள் சட்டத்தினின்று விலக்கிவிட முடியாமற் போனதுடன், அந்தச் சட்ட அமைப்புகளா லேயே அம்மதக் கோட்பாடுகளைக் காப்பாற்றவும் செய்து விட்டனர். ஆகவேதான் இந்த நாட்டில் மதத்தின் பெயரால் ஒருவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; எப்படி வேண்டுமானாலும் பிழைக்க லாம். நாளைக்கு, இதே இந்திராகாந்தி மக்களிடத்தில் வேடிக்கையாகப் பேசித் திரியும் நிகரமைக் கொள்கைகள் ஒருவேளை செயல் முறைக்கு வந்தாலும் கூட, அவற்றைச் செயற்படுத்த முடியாமல் தடுக்கின்ற வல்லமை இந்த மதக்கோட்பாடுகளுக்கு உண்டு; அவற்றுக்குச் சட்டக் காவலும் உண்டு. எனவே, இந்த ஒன்றை வைத்தே அந்த அம்மை யாரின் பேச்சுகளில் எத்துணையளவு உண்மையிருக்கும் என்றும் எடையிட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த நாட்டின் சட்டம் இங்குள்ள மதங்களுக்கு—குறிப்பாக இந்து மதத்திற்குக் காவலாக்கப் பட்டுள்ளது. எனவேதான் எத்தனைப் பொதுவுடைமை சமவுடைமைக் கொள்கைகள்—முழக்கங்கள் வந்தாலும் இங்குள்ள தீமைகளை ஓர்

www.thamizham.net - Free E book No 7454

இம்மியளவும் பெயர்த்துக் காட்ட முடியவில்லை. இந்தியச் சட்ட அமைப்பையே உடைத்துத் தூள் தூளாக்கும் கொள்கையை எந்தக் கட்சி கொண்டுள்ளதோ அதுதான் இந்த வகையில் ஓரளவு உண்மையான—நம்பிக்கையுடைய கட்சியாக இருக்க முடியும். அவ்வாறு இங்குள்ள ஒரு கட்சிக்கும் ஒரு கொள்கை இருப்பதாகச் சொல்ல முடியாது.

எனவே, இங்குள்ள மதக் கோட்பாடுகளுக்கு மாறாக எத்தனை எழுதினாலும், பேசினாலும், முயன்றாலும் எதனையும் செயலாக்க முடியாமல் போய் விடுகிறது. இந்த நாட்டைத் திருத்துவதற்கும், இங்குள்ள தீமைகளை ஒழிப்பதற்கும் இங்குள்ள கட்சிகள் தலைவர்கள் பேசுவதைப்போல், இங்குள்ள தாளிகைகள் எழுதுவதைப்போல், உலகில் உள்ள வேறு எந்த நாட்டிலும் ஒரு முயற்சி நடைபெறவில்லை. அங்கங்குள்ள கட்சிகளும் குறைவு; தலைவர்களோ அதைவிடக் குறைவு; அவர்கள் பேசுவதோ அதை விடக் குறைவு; அவ்வாறு பேசும் செய்திகளும் அந்தந்த நாட்டின் முன்னேற்றத் திட்டங்களைப் பற்றியனவாகவே இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் அங்குள்ள பழைய கட்டிடங்களை இடித்துத் தள்ளிவிட்டுப் புதுக் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள்; நாமோ இங்குள்ள பழைய கட்டிடங்களையே இங்குமங்குமாகப் பூசியும் வெள்ளையடித்தும் புதிய கட்டிடங்கள் என்று பேசுவதுமல்லாமல் பீற்றிக் கொள்ளவும் செய்கின்றோம். இந்த இடர்ப்பாடுகள் அனைத்துக்கும் இங்குள்ள மத ஆளுமைகளே காரணியங்கள். அவை மக்களை மட்டும் மூடர்களாக்கவில்லை; ஆட்சியையும் முடமாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றை எந்தக் கொம்பனாலும் களைய முடியாதபடி சட்ட வல்லமைகள் அவற்றுக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டிருக்கின்றன. எனவே—தான் இந்தியா தன்னுரிமை பெற்று இருபத்தேழு ஆண்டுகளாகியும் எந்த ஒரு துறையிலும் உருப்படியாக முன்னேற முடியாமல் திக்கித் திணறிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், அதே மதங்களைக் காவலாகக் கொண்டு, மக்கள் பெருக்கத்தில் மட்டும் அளவுக்கு மீறிய சுமையை ஏற்றபடி முக்கி முணகிக் கொண்டு கிடக்கின்றது. இந்த நுட்பத்தை விளங்கிக் கொண்டோ அல்லது கொள்ளாமலோ—நம் தலைவர்கள்—எனப்படுபவர்கள்—அந்த மத உரிமைகளில் கைவக்க வக்கில்லாமல்—வைத்தால் பிழைப்புக் கெடுமே என்னும் அச்சத்தால்-வாய்க்கு வந்தபடி சீர்திருத்தம் பேசுவதும்-பேசியவற்றிற்கு நேர் மாறாகச் செய்வதுமாகக் காலத்தைக் கடத்தி வருகின்றனர். நம் அரசியல் அமைப்புப்படி எந்த ஒரு துறையில் எதைச் செய்தாலும் அதற்கு மதத்தின் ஒப்புதல் இருந்தே ஆக வேண்டும். இதனால்தான் பார்ப்பனியத்தின் ஆணிவேரை யாராலும் அசைக்க முடியவில்லை.

www.thamizham.net - Free E book No 7454

ஏனெனில் பார்ப்பனீயம் இந்த நாட்டில் முழுக்க முழுக்க மதத்தின் வேர்களில்தான் தன் முட்டைகளை இட்டுக் கொண்டுள்ளது. எனவே அந்த நிலை தகர்க்கப்படும் வரை மதத்திற்கு மாறுபடவோ, அல்லது பார்ப்பனீயத்திற்கு எதிராகவோ நாம் எதையும்-சொல்லி விடலாம்-ஆனால் செய்துவிட முடியாது.

இந்த நிலைகள் இந்திய நாட்டின் முழுமையையும் பொறுத்த அளவில் எப்படியிருந்தாலும், நம் தமிழகத்தைப் பொறுத்த அளவி லாகிலும், பகுத்தறிவாளர்கள் (!) ஆளுகின்றதாக நாம் (!) பேசிக் கொள்ளுகின்றோமே, அவர்கள் ஆட்சியிலாகிலும், அவர்கள் முன்னிலை யில் சட்டத்திற்கு மாறுபடாத வகையில், சிற்சில நடைமுறைகளுக் கான கருத்துரைகளை, வேண்டுகோளாக வைக்க விரும்புகின்றோம். இவ் வேண்டுகோள்களில் பெரும்பாலானவை அவர்கள் ஆட்சிக்கு வராதபொழுது, அஃதாவது பேராயக் கட்சி-அஃதாவது அவர்கள் அன்று பேசிய எழுதிய மொழியிலேயே சொன்னால் 'வட நாட்டா னுக்கு வால்பிடிக்கின்ற கட்சி' ஆண்டு கொண்டிருந்தபொழுது-இவர்கள் கோட்டைப் பக்கம் எட்டிப் பார்க்கவே முடியாதவர்களாக இருந்தார்களே அப்பொழுது பேசியவற்றிலும்-எழுதியவற்றிலும், கேள்விப்பட்ட-தென்பட்ட செய்திகள்தாம்! சட்டத்திற்குட்பட்ட வகை யிலேயே இவை சொல்லப் பெறுவதால் இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர மிகுந்த பாடுகள் படவேண்டியிராது. எண்ணமும் துணிவுந்தாம் வேண்டும். இவற்றால் தனிப்பட்ட நிலையிலோ அரசுக்கோ வருமானம் இருக்காது. ஒரு வேளை அதற்குக் குறைவு வந்தாலும் வரலாம். மக்கள் நலம் கருதி (அப்படி ஒரு கோட்பாடு இருந்தால்) அதையும் பொறுத்துக் கொள்ளலாம்.

முதற்கண், அரசு விடுமுறைகளாக, அலுவலகங்களுக்கும், எதிர் காலத்தையே உருவாக்கவிருக்கும் நம் குழந்தைகள் படிக்கும் கல்விக் கூடங்களுக்கும் இத்தனை விடுமுறைகள் விடுகின்றோமே, அவை தேவைதாமா? நம் அமைச்சர்கள் எத்தனையோ நாடுகள் சுற்றியவர் களாயிற்றே அங்கெல்லாம் இப்படித்தான் விடுமுறைகள் விடப் பெறுகின்றனவா? இல்லையே! இங்கு மட்டும் எதற்கு இத்தனை விடு முறைகள்? போகட்டும், அந்த விடுமுறைகள்தாம் எதற்கென்று வேண்டாவா? விடுகின்ற விடுமுறைகளில் தொண்ணூறு விழுக்காடு மத விடுமுறைகளே! அவற்றை ஏன் விடுமுறையாக விட வேண்டும்? விருப்ப விடுமுறையாக விட்டுவிட்டுப் போனால் தேவைப்பட்ட மதப் பித்தர்கள் அன்றைக்கு விடுமுறை போட்டுவிட்டுப் போகிறார்கள்; பணி செய்பவர்கள் அவர்களுக்குத் தேவையான இன்னொரு நாளில் அதை எடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்தப் பழக்கம் நம் ஆட்சியிலும்

www.thamizham.net - Free E book No 7454

அஃதாவது- பகுத்தறிவாளர்கள் (!) என்று நாம் நம்மைக் கூறிக் கொண்டோமே—நம் ஆட்சியிலும்-தேவைதானா? மாற்றவே முடியாதா? இதற்கும் மாநிலத் தன்னாட்சி வாங்கித்தான் ஆக வேண்டுமா? கொஞ்சம், சட்டத்தைப் புரட்டிப் பாருங்களேன்!

அடுத்து, இந்த 'மார்கழி' மாதத்திலும், வேறு திருவிழாக் காலங்களிலும், தெருத் தெருவாக ஒலிபெருக்கிகளைப் போட்டுக் கொண்டு திருவெம்பாவை திருப்பாவைப் பாடல்களைத் தெருப்பாவைப் பாடல்களாக ஆக்கிக் கொண்டு வருகின்றார்களே, அந்த வீண் கத்தல்கள் தேவைதானா? இந்த முறை எந்த வகையில் மதக்கோட்பாடுகளை வளர்க்கின்றது? அந்த மாதத்தில் எழுந்து நீராடக் கூப்பிடும் பாவைப் பாடல்களுக்கு ஏதாவது பொருளிருக்கின்றதா? எங்குப்போய் நீராடுவது? நகராட்சிக் குழாய்களிலா? கூவத்திலா? அது போகட்டும்! அப்படிப் போய் எந்தப் பெண்பிள்ளைகளைக் கூப்பிடுவது? அவர்கள் என்ன, நோன்பு நோற்கவா போகின்றனர்? என்ன நோன்பென்று எந்த மத-மடத்-தலைவனாவது சொல்ல முடியுமா? வெட்கமும்-பொருளுங்கெட்ட இந்தச் செயலுக்காக எத்தனைப் பேர் காதுகளைப் புண்ணாக்குவது? அக்காலங்களில் பள்ளித் தேர்வுகளுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் எத்தனை மாணவர்களின் மனங்களை நோகச் செய்வது? பார்ப்பனப் பிள்ளைகள் எப்படியும் படித்துக் கொள்வார்கள்! நம் பிள்ளைகள் எப்படிப் படிப்பார்கள்? வாய்ப்பாகக் கிடைத்த அந்த முப்பது நாள் காலை நேரங்களையும் இப்படியா ஒலிபெருக்கிகளைப் போட்டுக் கொண்டு, தெருத் தெருவாக, மடம் மடமாக, கோயில் கோயிலாகக் கூத்தடிப்பது? இப்படி ஒலி பெருக்கியில் கூப்பிடச் சொல்லியா அந்த ஆண்டாளம்மாளும், மாணிக்கவாசகரும் பாடி வைத்தார்கள்? இலக்கிய வடிவான நூலமைப்பின் உட்பொருள் விளங்காமல் இப்படியா மதப்பித்தர்கள் பொருள்பண்ணிக் கொள்வது? பொருள் எப்படியோ போகட்டும்; தொலைந்து போகின்றது! அதற்காக, ஏன் ஒலி பெருக்கி வைத்து அதை எல்லாருடைய காதுகளிலும் போய்க் குத்தல் வேண்டும்: அப்படிக் குத்தினவுடனே அவர்களுக்குப் பத்தி வந்து விடுமா? அதனால் படியரிசி இரண்டு கிடைத்து விடுமா? பின், ஏன் இதுநாள் வரை கத்தி ஒன்றும் கிடைக்கவில்லை. இப்படி மதப்பித்தர்கள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி மக்களின் அமைதியைக் கெடுப்பதற்கு எந்தச் சட்டம் இசைவு தருகின்றது?

ஒலிபெருக்கியை எதெதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று ஓர் அளவு-எல்லை இல்லையா? பக்கத்து வீட்டுக்காரனுடைய இசைவு பெறாமல் ஒரு தொழிலுக்கான பொறியையே இயக்கக்கூடாது என்று

www.thamizham.net - Free E book No 7454

இருக்கும் பொழுது, எல்லாருக்கும் துன்பந்தரும் ஒலி பெருக்கிகளை மட்டும் கோயில்களில்—தனிப்பட்ட ஒருவனின் திருமணக் கொம்மாளத்தில்—மட்டும் எப்படி வைக்கலாம். இஃது என்ன கொடுமை? இதற்கேன் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒருவனோ, ஒரு கோயில் அமைப்பாளர்களோ மகிழ்ந்தால் அவர்களைச் சுற்றியுள்ள அனைவரும் துன்பப்பட வேண்டும் என்பதுதான் குடியரசோ? அமைச்சர்களுக்குத் தொல்லையில்லை. வெளிக்காற்றே புகாத அறைகளில் பகல் வரைக்கும்கூட அம்மாதத்தில் தூங்கலாம். பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் இந்த ஆண்டாளும் மாணிக்கவாசகரும் ஒலிபெருக்கி வழியாகவும், வானொலி (இஃது ஒரு சாவக்கேடு- நம் நாட்டில்) வழியாகவும் எவ்வளவு தொல்லை கொடுக்கின்றனர். இதையேன் அரசு கவனிக்கக் கூடாது?

இந்த, இந்துமதப் பித்தர்கள் செய்யும் விளம்பரப் பித்தலாட்டங்களைப் பார்த்துவிட்டுத் தந்தம் மதப் பித்தர்கள் எங்குத் தங்களைக் கைவிட்டு விடுவார்களோ என்று அஞ்சிய கிறித்தவ, இசுலாமிய மதத் தலைவர்களும் தங்கள் தங்கள் கோயில்களிலும் இந்தப் புதிய பாணிகளைப் பின்பற்றி ஒலிபெருக்கி வழியாகவே தங்கள் தங்கள் மத உரிமை(!)களைப் பரப்பி வரத் தொடங்கி விட்டனர். இரம்சான் போலும் திருவிழாக் காலங்களில் தங்கள் மதக்காரர்களை (அஃதாவது ஒரு தெருவிலுள்ள ஓரிரண்டு வீட்டுக்காரர்களை) எழுப்புவது— போல் இரவு இரண்டு மணிக்கே வந்து, அந்தத் தெருவில் உள்ள, அத்தனை வீட்டுக்காரர்களும் திடுக்கிட்டு எழும்படி சலங்கையொலியெழுப்பும் தமுக்கொலியை அடித்தபடி காட்டுக் கத்தல்கள் கத்தி வருவது எப்படி நாகரிகமான மதக்கோட்பாடோ தெரியவில்லை. விருப்பமில்லாத—அல்லது வேண்டாத—பலருடைய—அல்லது சிலருடைய—அல்லது ஒருவனுடைய காதுகளில்—அவர்கள் அல்லது அவன்—விரும்பாத நேரத்தில்—ஒலிபெருக்கி வழியாகவோ வேறு தப்பறைகளின் வழியாகவோ ஒலிகளைப் புகுத்தி அமைதியைக் கெடுப்பது எப்படி நாகரிகமாகும்? மதம் என்னும் அளவில் மட்டும் எப்படி நாகரிகமற்ற ஒரு செயல் நாகரிகமாகக் கருதப்பட்டு விடும்? இதை எப்படி அரசு விட்டுக் கொண்டிருக்கலாம். பெரும்பாலும் பொதுக் கூட்டங்களைத் தவிர வேறு எதற்காக ஒலிபெருக்கிகள் வைக்கப்படல் வேண்டும்? விலங்குத்தனமான வேண்டாத கரட்டுக் கூச்சல்கள் மக்களின் அமைதியை எத்தகைய அளவில் கெடுத்து வாழ்வை வெறுப்புடையதாக ஆக்கி விடுகின்றன!

மற்றும் விளக்கணி விழா (தீபாவளி)ப் போலும் விழா நாட்களில் கேட்கவே வேண்டியதில்லை. பார்ப்பன வாண்டுகள், அல்லது

www.thamizham.net - Free E book No 7454


'இப்பிப்' பார்ப்பன விடலைகள் ஒரு சிலர் முதல் நம் (!) சட்ட மன்ற உறுப்பினர்களின் 'குழந்தை'கள், நம்(!)மாண்புமிகு அமைச்சர்களின் 'செல்வத்திரு' மகன்கள் வரை எல்லாரும் வேண்டுமென்றே கொளுத்தும் 'பட்டாசு' வெடிகளால் பொதுவிடங்களில் அமைதியைக் கெடுத்து நகரத்தையும் தெருக்களையும் குட்டிச்சுவராக்கிக் குப்பை கூளங்களைப் போடத்தான் வேண்டுமோ? எந்த 'நரகாசுரன்' செத்துப்போன இழவிற்காக நாம் இப்படி ஆண்டுதோறும் பட்டாசு வெடிகளின் பட்டாளக்களத்தில் அஞ்சி அஞ்சி நடப்பது? அந்த 'நரகாசுரன்' எத்தனையாவது 'நரகாசுரன்'? எந்த ஆண்டில் அவன் இறந்தான்? என்பதை எந்த வரலாற்று நீலகண்ட சாத்திரியாவது ஆராய்ந்து அரசுக்குச் சொல்லியுள்ளாரா? பின், ஏன் அவனுக்காக இந்த அணுக் குண்டுக் காலத்தில் நாம் நம் மூட நம்பிக்கைக்குப் புதுப்புதுப் பொருள்களையெல்லாம் கற்பித்துக் கொண்டு, தாளைத் திரியாக்கிக் காசைக் கரியாக்கி, விலைமதிப்பற்ற மருந்தைப் புகையாக்கி, நம் காதுகளையும் புண்ணாக்கிக் கொள்ளுதல் வேண்டும்? இதில் என்ன 'மெய்ப்' பொருள் இருக்கிறது? எந்தப் புதுப் பெரியவாளாவது 'தென்மொழி' அலுவலகத்திற்கு வந்து விளக்கிக் காட்ட முடியுமா? அல்லது, 'அரசியல்' 'பொருளியல் போலும் பெரிய பெரிய'இது'களுக்கெல்லாம் தொடர் கட்டுரைகளில் 'விளக்கம்' போட்டுக் காட்டும் தினமணிச் 'சிவாராமன்'கள் வந்தாவதுவிளக்கிக்காட்ட முடியுமா? இந்தக் காலங்களில் தொழிலாளர்களிடத்தில் எழும் வெகுமதிப் போராட்டங்களும், அவற்றால் தொழிலகங்கள் இழக்கும் வருமானங்களும், அவற்றைப் பிடுங்கக் காத்திருக்கும் வாணிகக் கள்ளர்களும், இவர்கள் அத்தனைப் பேர்களின் நடைமுறைகளுக்கும் அணுப்பிசகாமல் ஆண்டு தோறும் இசைவளித்து விட்டு, அவ்வப்பொழுது அமெரிக்காவிற்கும் உருசியாவிற்கும் வெட்கமில்லாமல் மடியேந்திப் போகும் ஆட்சி மூடர்களுக்கும் யார் வந்து அறிவு கொளுத்துவது...?—இஃது என்ன அப்படி முழுக்க முழுக்கவா நடுவணரசைப் பொறுத்த செய்தி...?

அது போகட்டும்; நம்(!)அமைச்சர்களைக் கேட்கின்றோம்: கலைமகள் விழா, திருமகள்விழா, கருவிவிழா. என்றெல்லாம் அரசு அலுவலகங்களில் கொண்டாடுவதற்காகப் பிய்த்துப் பிடுங்குகிறார்களே, அவையெல்லாம் நம்(!)ஆட்சியிலும்கூடகட்டாயம் அரசு அலுவலகங்களில் கொண்டாடப்படத்தான் வேண்டுமா?—இப்படி நீங்கள் தாமே அன்றைக்குக் கேட்டீர்கள். இப்பொழுது நீங்களே கொண்டாட விடுகிறீர்களே (நீங்கள் கொண்டாடுவது ஒரு புறம் இருக்கட்டும்!) அது மட்டும் ஏன்? இவற்றைக் கொண்டாடுவதை விட்டுக் கொண்டிருந்ததற்காகத்தானே அன்றைய பேராயக் கட்சியை 'வட நாட்டானுக்கு வால் பிடிக்கும் கட்சி' என்று பகடி செய்தீர்கள்? இன்றைக்கு உங்களை யார் பகடி செய்வது? ஒருவேளை இதற்கும் அந்த மாநிலத் தன்னாட்சி (அப்படிச் சொன்னாலும் உங்களுக்கு விருப்பம் இருக்காது) இல்லை—'மாநில சுயாட்சி' வாங்கியாக வேண்டுமோ? இதையெல்லாம் கண்டித்தால், நாம் நம் (!) அண்ணாவிற்கும் நம் (!) பெரியாருக்கும் விழா-வேடிக்கைகள், தீவ, தூவ, படைப்புகள் செய்ய முடியாது? (மக்களைக் கண்ணுக்குக் கண்ணாக ஏமாற்ற முடியாது; வேண்டுமானால் மறைமுகமாக ஏமாற்றலாம்;] எனவே அவர்கள்

www.thamizham.net - Free E book No 7454

கொண்டாடும் விழாக்களை-அவை-கருவிப் பூசனையாகட்டும், கலை
மகள், திருமகள் பூசனையாகட்டும் நாம் விட்டுக் கொடுப்போம்; அப்
பொழுதுதான நம (!) அண்ணு விழாவை நாம் செய்யவும அவர்கள்
விட்டுக் கொடுப்பார்கள் என்ற எண்ணமோ, ஏதோ? சென்ற மாதம்
நடந்த நம் (!) முப்பெரு விழாவின் பொழுது கூட நம் (!) அண்ணுச்
சாமி(!)க்குப் பல விடங்களில் கற்பூரம, பூசனைகள் செய்யப்
பட்டன!!! நல்ல பகுத்தறிவு...! கூடிய விரைவில் பெரியார் கோயில்-
கள், அண்ணு கோயில்கள் சென்னையிலேயே கட்டப்பட்டாலும்,
அவற்றிலாகிலும் நாம் (!) கொண்டுவர விரும்பிய கோயில் பூசகர்
சட்டம் நிறைவேற்றப்படுமோ என்னவோ! இல்லை, அதற்கும் மாநிலத்
தன்னுட்சி தேவைப் பட்டாலும் படலாம்.

மதங்கள் எப்படி உருவாயின என்பதற்கு நாம் தடித்தடியான
வரலாற்று நூல்களைத் தேடிப் படிக்க வேண்டுவதில்லை. நம்முடைய
தமிழகத்தின் கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் நாம்
வாழ்ந்திருந்தால் போதும். சமணமும் புத்தமும் மட்டுமல்ல-இசுலாமும்
கிறித்துவமும் இன்னுஞ்சொன்னுல் மாலியத்தின் சைவத்தின் முக்காற்
பகுதிகளும்-இந்து மதத்தின் குப்பைத் தொட்டிக் கோட்பாடுகளும்-
அனைத்தும் தோன்றிய வரலாறெல்லாம் இப்படித்தான் என்று அறிந்து
கொள்ளலாம்! முன்னர் சொற்களாக இருக்கும்; பின்னர் மெய்ம
(தத்துவ)மாக மாறும்; அதன்பின்னர் மந்திரமாக விளங்குவதென்று,
விளம்பரப்படுத்தப் பெற்று மக்களை அடிமைப் படுத்தும். "சிவாயநம"
மந்திரங்கள் 'வேத' மந்திரங்கள் தொடங்கி 'புத்தம் சரணம்
கச்சாமி' என்று தொடங்குகின்ற 'சச்சாமி' மந்திரங்கள், 'கருத்த
ரூக்குத் தோத்திர' மந்திரங்கள், 'அல்லா'கூ அக்பர் மந்திரங்கள்
வரை இப்படி வந்தவைதாம்! நம்(!) 'கடமை'யும், 'கண்ணிய'மும்.
'கட்டுப்பாடு'ம் இப்படித்தான் ஒரு காலத்தில் 'அண்ணு'மதத்தின்
மந்திரங்களாக இருக்கும். மொத்தத்தில் நாம்(!) பழைய மதங்களைப்
பழிக்கிறோம்; ஆனுல் புதிய மதங்களைத் தோற்றுவிக்கிறோம். எப்
பொழுதும் இந்த இயற்கை முறையில் பிழையிருப்பதில்லை; நடை
முறைகளில்தாம் பிழைகள் மட்டுமன்று, மூட நம்பிக்கைகளும் வந்து
புகுந்து கொள்ளும். எனவே புதியமத(!)க்கோட்பாட்டுக்காரர்களிடம்
பழைய மதக் கோட்பாட்டுப் பிழைகளைப்பற்றிச் சொல்வது, பயனளிப்
பதாக விருக்குமோ இருக்காதோ? சொல்லியாக வேண்டுவது நம்
கடமையாக இருக்கிறது!



## மு. வ. புகழ் வாழ்க!

மதுரைப் பல்கலைக் கழகத் துணைக் கண்காணகர். பேரா. பர்.
மு. வரதராசனுர் மறைந்தது தமிழுலகிற்குப் பேரிழப்பாகும்.
ஆசிரியத் துறையிலும். இலக்கியத் துறையிலும் அவராற்றிய பணி
கள் அவரின் நினைவெச்சங்களாக என்றும் இருக்கும். அவர் குடும்பத்
தினர்க்கு எம் ஆழ்ந்த இரங்கல்கள். அவர் புகழ் வாழ்க!—ஆசிரியர்.

www.thamizham.net - Free E book No 7454

சிறப்புக் கட்டுரை:

# வள்ளுவர் கோட்டக் கால்கோள் விழாப் பாவாணர் வாழ்த்துரை விளக்கம்.

## முகவுரை:

உ௰௰௫, கன்னி உ-ஆம் பக்கல் (18—9—'74) அறிவன் (புதன்)கிழமை பிற்பகல் 5 மணிக்கு, சென்னை மாநகர் நுங்கம்பாக்கம் ஏரிப் பகுதியில், மாண்புமிகு கல்வியமைச்சர் பர். (Dr.) நாவலர் இரா. நெடுஞ்செழியனார் அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதலமைச்சர் பர் (Dr.) கலைஞர் மு. கருணாநிதியார் அவர்கள் தொடங்கி வைத்த வள்ளுவர் கோட்டக் கால்கோள் விழாவில், மாண்புமிகு பொதுப்பணித் துறையமைச்சர் ப. உ. சண்முகனார் அவர்கள் வேண்டுகோட் கிணங்கி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையமைச்சர் பேரா. க. அன்பழகனார் அவர்கள் முன்னிலையில், நான் வழங்கிய வாழ்த்துரை நேரமின்மைபற்றி முற்றுப் பெறாமையால், அதைப் பலர்க்கும் பயன்படுமாறு முற்றுவித்தற் பொருட்டு, இந்நெடு விளக்கக் கட்டுரையை வரையலானேன்.

கலைஞர் கருணாநிதி நகர்,
உ௰௰௫, கன்னி ௩
(19—9—'74)

www.thamizham.net - Free E book No 7454

# வள்ளுவர் கோட்டக் கால்கோள் விழா வாழ்த்துரை விளக்கம்.

**1. வாழ்த்துரை வகைகள் :**

இயன்மொழி வாழ்த்து, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து என வாழ்த்துரை மூவகைப்படும்.

ஒருவருடைய சிறந்த பண்புகளையும் அரிய ஆற்றல்களையும் எடுத்துரைத்துப் புகழ்வது அல்லது வாழ்த்துவது, இயன்மொழி வாழ்த்து.

*" அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும் "*

(தொல். புறத். 35).

*" மயலறு சீர்த்தி மாண்டோர் மன்னவன்*
*இயல்பே மொழியினும் அத்துறை யாகும். "*

(பு. வெ. 9 : 195).

கடவுள் (அல்லது நீ வணங்கும் தெய்வம்) உன்னைப் பாது காக்க, நீ வழிவழி செல்வத்தோடு சிறந்து விளங்குக என்று, ஒருவரை வாழ்த்துவது புறநிலை வாழ்த்து.

*" வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்*
*பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து*
*பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே...... "*

(தொல். செய். 109).

நோயாளிக்கு முன்பு கசப்பாகவும் காரமாகவுமிருந்து வருத்தி னும், பின்பு நலம்பயக்கும் மருந்து போன்று, நெறிதவறியவருக்கு அல்லது அறியாதவருக்கு முன்பு கேட்பதற்கு வெறுப்பாக இருப்பி னும், பின்பு நன்மை பயக்கும் நல்லறிவுரை கூறுவது வாயுறை வாழ்த்து.

வாயுறை மருந்து.

*வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்*
*வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்*
*தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்(று)*
*ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே."*

(தொல். செய். 111

www.thamizham.net - Free E book No 7454

வாழ்த்துதல் என்பது ஒருவரை நலமாக நீடு வாழவைத்தல். அது, முற்றத் துறந்த முழுமுனிவரான நிறைமொழி மாந்தர் அல்லது ஆன்றவிந்தடங்கிய சான்றோர் "நீடு வாழ்க" என்று சொல்வதனாலும், முதறிஞர் கூறும் அறவுரை அல்லது அறிவுரையாலும் நிகழும். தனிப்பட்டவர்க்கு இவ்விரு வழியும் இயலும்; ஒரு தொகுதியார்க்கோ பின்னதே ஏற்கும்.

திருவள்ளுவர், உலகினர் அனைவர்க்கும், சிறப்பாகத் தமிழர்க்கு, உரைத்த அறவுரையும் அறிவுரையுமான திருக்குறள், திருவள்ளுவமாலையில் மதுரை யறுவை வாணிகன் இளவேட்டனார் என்னும் புலவர் பெயரிலுள்ள,

"இன்பமுந் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து"

என்னும் வெண்பாவின்படி, 'வாயுறை வாழ்த்து' எனப்படினும் உண்மையிற் 'புறநிலை வாழ்த்து'ங் கலந்ததேயாகும்.

இயன்மொழி வாழ்த்திற் கடவுள் வாழ்த்தும் அடங்குவதனாலும், கடவுளை ஒருவர் புகழ்வதன்றி வாழவைத்தல் என்பது பொருந்தாமையாலும், மாந்தரைப் புகழ்வதற்கும் கடவுளைப் புகழ்வதற்கும் வேறுபாடுண்மையாலும், கடவுள் வாழ்த்திலுள்ள சிறப்பான அச்சத்தோடு கூடிய அன்பு வணக்கத்தைக் குறித்தற்கு, வாழ்த்து என்னும் சொல்லினின்று வழுத்து (வ. ஸ்துதி) என்னும் சொல் திரிக்கப் பட்டது.

"வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று."

என்னும் திருக்குறளில் (1317), வழுத்தினாள் என்னுஞ் சொல்லை வாழ்த்தினாள் என்னும் பொருளில் திருவள்ளுவர் ஆண்டிருப்பினும், அதைப் பாவலன் உரிமை (Poetic licence) யென்றே அமைத்தல் வேண்டும்.

கடவுளை வழுத்தும் சிறப்பான கலிப்பா வகைகள் தேவபாணி யெனப்படும். ஆரியர் தமிழகம் வந்தபின் "வருணப் பூதர் நால்வகைப் பாணியும்" (சிலப். 6, 35-6) எனச் சிறுதெய்வ வழுத்தும் தேவபாணியெனப் பட்டமையால், முத்தொழில் புரிவோன் என்னும்

www.thamizham.net - Free E book No 7454

கொள்கைபற்றிக் கடவுளையொத்த சிவன் அல்லது திருமால் வழுத்துக்கள் பெருந்தேவபாணி யெனப்பட்டன.

வள்ளுவர் கோட்டக் கால்கோள் விழாவில் வாழ்த்துப் பெறற் குரியார், திருவள்ளுவரும் அவருக்குக் கோட்டம் அமைப்போரும் ஆவர். இவருள் முன்னவர் வாழ்த்துப் புகழ்வு முறையிலும், பின்னவர் வாழ்த்து நீடுவாழ வேண்டல் முறையிலும், முன்னும் பின்னுமாக இக்கட்டுரையுள் அமையும்.

திருவள்ளுவர் வாழ்த்துத் தேவபாணியின் பாற்படும்.

## 2. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கோட்டம் என்று பெயர் குறிக்கப் பெற்ற கோயில்கள்.

புறநிலைக் கோட்டம் (சிலப். 5 : 180) = ஸ்ரீ கோயில் என்னும் அருகன் கோயில்.

*" அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்*
*புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்*
*உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்*
*வச்சிரக்கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்*
*நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்...."*

(சிலப். 9: 9-13).

அமரர் தரு = தேவருலகத்துக் கற்பக மரம். வெள்யானை = ஐராவதம் என்னும் தேவர் கோனின் வெள்ளையானை. வெள்ளை நாகர் = வெண்ணிறப் பலராமர். உச்சிக்கிழான் = கதிரவன். ஊர் = சிவனிருக்கையாகிய கைலாயம் என்னும் வெள்ளிமலை. வேல் = வேலன் என்னும் முருகன். வச்சிரம் = தேவர் கோன் வயிரப் படைக்கலம். புறம்பணையான் = ஊர்ப்புறத்தையடுத்த ஐயனார் என்னும் சாத்தன்.

காமவேள் கோட்டம் (சிலப். 9: 60).

மணிவண்ணன் கோட்டம் (சிலப். 10: 10) = திருமால் கோயில்.

ஐயை கோட்டம் (சிலப். 12 : 4) = காளி கோயில்.

பத்தினிக் கோட்டம் (சிலப். 30 : 151) = கண்ணகி கோயில்.

சுடுகாட்டுக் கோட்டம் அல்லது சக்கரவாளக் கோட்டம் (மணி 6 : 30-1) = உலகம் முப்பத்தொன்றையும் தன்னுள்ளடக்கிய சக்கர

www.thamizham.net - Free E book No 7454

வாளம் என்னும் கோளத்திலுள்ள, எல்லாத் தேவர்க்கும் பூம்புகார்ச் சுடுகாட்டையடுத்துச் சமைக்கப்பட்ட மாபெருங் கோயில்.

முதியோள் கோட்டம் (மணி : 22 : 3) = நாவலந் தேயக்காவல் தேவியாகிய சம்பாபதி கோயில்.

இனி, இறந்துபோன அந்தணர்க்கும் அரசர்க்கும் கற்புடைப் பெண்டிர்க்கும், உற்றுருறவினராற் சமைக்கப்பட்ட பள்ளிபடைகளும் (சமாதிகளும்) கல்லறைகளும், கோட்டமென்றே மணிமேகலையிற் குறிக்கப்பட்டுள்ளன.

> " அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
> ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
> ........................................................
> இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
> குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
> சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"
>
> (மணி. 6 : 54-59).

இனி, "இடுபிணக் கோட்டத் தெயிற்புற மாதலின் சுடு காட்டுக் கோட்ட மென்றல துரையார்" (மணி. 203-4) என்று, சுடலையும் கோட்டமென்றே குறிக்கப்பட்டிருப்பதால், மதிலால் அல்லது வேலியாற் சூழப்பட்ட எவ்விடமும் கோட்டம் என்னும் பெயருக்குரியதென்பது அறியப்படும்.

## 3. கோட்டம் என்னும் சொல் வரலாறு :

உல்- உலம் = உருட்சி. உலம்வருதல்-உலமருதல் = சுழலுதல். உல்-உல-உலவு-உலாவு. உலவுதல் = வளைதல், சூழ்தல், சுற்றுதல், திரிதல்.

உல்-குல்-குல-குலவு.

குலவுதல் = 1. வளைதல் "குலவுச் சினைப் பூக்கொய்து" (புறம். 11 : 4). 2. உலாவுதல் "எமதன்னையை நினைத்தே குலவினனே" (சிவரக. விசயை. 14).

குலவு = வளைவு. "குலவுக் கொடுஞ்சிலை" (பு. வெ. 1 : 10)

குலவு-குலாவு. குலாவுதல் = வளைதல். வளைத்தல். "குலாவுஞ் சிலையர்" (பு. வெ. 4 : 3).

குலு-குலுத்தம் = வளைந்த காயிலுள்ள பயற்று வகை. (திவா).

www.thamizham.net - Free E book No 7454

குல்-கொல்-கோல் = 1. (உருண்ட) திரட்சி. "கோனிற வளை யினுர்க்கு" (சீவக. 209). "கோற்றொடி மாதரொடு" (சிலப். 26:121). 2. உருண்டு திரண்ட தடி.

கோல்-கோலம்—பந்துபோற் சுருளும் முள்ளெலி.

கோல்-கோலி—குண்டு வடிவான விளியாட்டுக் கருவி. ம. கோலி, தெ. கோலி (g), து. கோளி(g), மரா. கோலீ (g).

குல்-குன்-குனி. குனிதல்—1. வளைதல். "குனிவளர் சிலை" (சீவக. 486). 2. வணங்குதல். (சூடா.)

குன்-குனுகு-குனுகுதல்—சிரித்து உடல் வளைதல்.

குன்-கூன்—1. வளைவு. "கூனிரும்பினிற் குறைத்து" (நைடத. நாட்டுப். 10). 2. உடற்கூனல். (திவா.). "கூனுங் குறளும்" (புறம். 28). 3. கூனன் (கூனி). "சிறுகுறுங் கூனும்" (சிலப். 27 : 214).

கூன்-கூனி—வளைந்த சிற்றிறால். "கூனிகொத்தி............ கொக்கிருக்கும் பண்ணை" (குற்ற. குற. 94).

கூனுதல்—1. வளைதல். 2. முதுகு வளைந்து போதல்.

கூன்-கூனை —மூலையிற் கூனுள்ள நீர்ச்சால்.

குலவு-குரவு-குரவை—சிறப்பு நாட்களிற் குறிஞ்சி அல்லது முல்லைநில மகளிர் எழுவர் அல்லது பன்னிருவர் வட்டமாக நின்று, பாடியாடிச் சுற்றிவருங் கூத்து... ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை. (சிலப்.)

குரவு—ஒ. நோ : L. curvo, E. curve, to bend.

குரவை—ஒ. நோ : Gk. choros, a dance in a ring.

E. "Chorus, n. [L. chorus, from Gr. koros, a dance in a ring, a chorus] 1. In the Greek drama, (a) originally a company of dancers dancing in a ring accompanied by their own singing or that of others; a band of singers and dancers."

E. "Choir, n. [Written also quire, from O. Fr. choeur L. chorus, Gr. choros, a dance in a ring. a band] 1. A band of dancers. .......2. A collection of singers,

www.thamizham.net - Free E book No 7454

especially in divine service, in a church......."
—The Imperial Dictionary of
the English Language.

குரவு-குரகு-குரங்கு,-குரங்குதல்—வளைதல். "பாடுனள்.... இலைப்பொழில் குரங்கின" (சீவக. 657).

குரங்கு—1. வளைவு. "குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து" (சிலப். 10 : 157), 2. கொக்கி.

குரங்கு—ஒ. நோ: E. crank.

குலு-குரு-குருகு—1. வளையல், "கைகுவி பிடித்துக் குருகணி செறித்த" (கல்லா. 44 : 22). 2. வளைந்த கழுத்துள்ள நீர்ப் பறவை. 3. நாரை வான்பறைக் குருகி னெடுவரி பொற்ப" (பதிற்றுப். 83 : 2). 4. நாரை வடிவொத்த கொல்லுலைத் துருத்தி. "உலைதுலைக் குருகி னுயிர்த்தனர்" (சிலப். 4 : 59). 5. ஓதிமம் (அன்னம்). "நீரொழியப் பாலுண் குருகிற் றெரிந்து" (நாலடி. 135). 6. அன்றில். "குருகு பெயர்க் குன்றம்" (மணி. 5 : 13).

குருகு—ஒ. நோ: E. crane, OE. cran, OS., OHG. krano F. grue.

குரு-குருள்-குருளுதல்—சுருளுதல். "குருண்ட வார்குழல்" (திருவிளை. திருவாலி. 1 : 3)

குருள்—1. நெற்றி மயிர்ச்சுருள். (W.). 2. பெண்டிர் தலை மயிர். (பிங்.).

குருள்—ஒ. நோ : E. curl, MDu. krul, G. krol, LG., Du., E Fris, krul.

குரு-குறு-கிறு. கிறுகிறுத்தல்—1. தலை சுற்றுதல். 2. மயக்க மடைதல்.

கிறுகிறுவாணம்—சிறுவர் சுழற்றி விளையாடும் பொரி வாணம்.

குறு-கற-குறங்கு-கறங்கு.

கறங்குதல்—1. சுழலுதல். "பம்பரத்து......கறங்கிய படிய" (கந்தபு. திருநகரப். 28). 2. சூழ்தல். "கறங்கிருள் மாலைக்கும்" (திருவள்ளுவமாலை, 34).

கறங்கல்—1. சுழற்சி. (பிங்.). 2. வளைதடி. (அக. நி.).

www.thamizham.net - Free E book No 7454

கறங்கு—1. சுழற்சி. (திவா.). 2. காற்றாடி. "கான்முக மேற்ற ......கறங்கும்" (கல்லா. கணபதி).

கறங்கு—ஒ நோ : Gk guros, ring. L. gyre, E. gyrate, go in circle or spiral, revolve, whirl

குறு-குறள்-குறண்டு-குறண்டுதல் — 1. வளைதல். 2. சுருண்டு கொள்ளுதல்.

குல்-குள்-குளம்— 1. வளைந்த நெற்றி. திருக்குள முளைத்த கட்டாமதை" (கல்லா. 31 : 9). 2. வெல்ல வுருண்டை.

குளம் (வெல்லம்)—வ. gula.

குளம்-குளம்பு—உருண்டு திரண்ட விலங்குப் பாதம்.

குள்-குளி-குளியம்—1. உருண்டை. (அக. நி.). 2. உருண்டையான மருந்து மாத்திரை. (பிங்).

குளி-குளிகை—1. உருண்டையான மருந்து மாத்திரை. 2. பொன்னுக்க மாத்திரை, "குளிகையிட்டுப் பொன்னுக்குவன்" (திருமந். 2709).

"குளிகை—வ. குளிகா (gulika).

குழலுதல்—சுருளுதல். "கடை குழன்ற கருங்குழல்கள்" (சீவக. 164). குள்-குளல்-குழல்.

குழல்—1. மயிர்க் குழற்சி. "குழலுடைச் சிகழிகை" (சீவக. 1092). 2. பெண்டிர் தலைமயிர் சுருட்டி முடிக்கப்படுகை. (திவா.).

குழியம்—1. வளைதடி. (W.) 2. நறுமணவுண்டை. (சிலப். 14 : 171, அரும்.). 3. உருட்சி. (திவா ) குளியம்-குழியம்.

குள்-குண்டு—1. உருண்டிருப்பது அல்லது உருண்டு கனத்திருப்பது. 2. உருண்டையான நிறைகல். 3. உருண்டையான பொன்மணி. "பொன்னின் பட்டைமேற் குண்டு வைத்து" (S.I.I. ii, 182). 4. விலங்கின் விதை. 5. வெடிகுண்டு. 6. உருண்ட மாம்பழ வகை. 7. உருண்ட கலவகை. 8. உருண்டு திரண்ட ஆண் குதிரை அல்லது ஆண் கழுதை. தெ. குண்ட, மரா. குண்ட (g).

குண்டன்—தடித்த குள்ளன்.

குண்டான்—உருண்ட சட்டி வகை.

குண்டான்—குண்டா. மரா. குண்டா (g).

www.thamizham.net - Free E book No 7454

குண்டி—உருண்டு திரண்ட புட்டம்.

குண்டை—உருண்டு திரண்ட காளை.

குண்டு-குண்டலம்—1. வட்டம் 2. சுன்னம், 3. வானம். (பிங்.) 4. ஆடவர் காதணி வளையம்

குண்டலம்—வ. குண்டல.

குள்-குண்-குண-குணகு-குணகுதல் = வளைதல்.

குணகு-குணங்கு. குணங்குதல்-வளைதல்.

குணகு-குணக்கு—வளைவு. "நாய்வாலைக் குணக் கெடுக்கலாமா? "(பழ.). குணக்குதல்-வளைத்தல்.

குணகு-குணுகு-குணுக்கு—1. சிறுமியர் காது வளையம். 2. மீன்வலை ஈயகுண்டு.

குணுக்குதல்— வளைத்தல்.

குணலை—நாணத்தால் உடல்வளைகை "கூச்சமுமாய்ச் சற்றே குணலையுமாய்" பணவிடு. 310).

குண-குணம்-குடம்—1. உருண்ட திரட்சி. (W.). 2. வண்டிக் குடம். 3. நீர்க்குடம். 4. கும்ப ஓரை. (பன்னிருபா. 163). 5. குடதாடி 6. குடக்கூத்து. "நீணில மளந்தோ னாடிய குடமும்" (சிலப். 6:55).

குடம்—வ. கடம் (ghata).

குடக்கம்—வளைவு. குடக்கி— வளைவானது.

குட— வளைந்த (திருமுரு. 229, உரை).

குடம்-குடங்கு-குடங்குதல்—வளைதல்.

குடங்கு-குடங்கர்—1. குடம். "குணங்கர் கொணர்ந்திட.......நொண்டு கொண்டனர்" (கந்தபு. தேவகிரி. 24). 2. கும்பவோரை (சூடா.).

குடம்-குடந்தம்—1. மெய் வளைத்துச் செய்யும் வழிபாடு. "குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி" (திருமுரு. 229). 2 நால்விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைக்கை. (திருமுரு. பக். 47, அடிக்குறிப்பு. 3. குடம். பிங்.).

குடம்-குடா—1. வளைவு; "குடாவடி யுளியமும்" (சிலப். 25:50), 2. குடாக்கடல். வளைகுடா, எ-டு : மன்னார் குடா. விரிகுடா, எ-டு : வங்காளக்குடா, 3. மூலை (W.).

குடம்-குடி—வளைந்த புருவம். (பிங்).

குள்-கூள்-கூளி—வளைந்த பச்சை வாழைப்பழம்.

குள்-கொள்—வளைந்த பயற்றங்காய். அதிலுள்ள பயறு.

www.thamizham.net - Free E book No 7454

கொள்-கொண்பு-கொம்பு—விலங்கின் தலைமேலுள்ள வளைந்த வுறுப்பு, மரக்கிளை, கோல், பிள்ளை, பெண்பிள்ளை, வளைந்த எழுத்து வரி.

கொம்பு-கொப்பு—கொம்பு போன்ற மரக்கிளை, ஒரு காதணி.

கொம்பு-கம்பு—கோல், தடி (பாண்டி நாட்டு வழக்கு).

கம்பு-கம்பம்—தூணாக நாட்டும் பெருமரத் தடி.

கொம்பு-கொம்பன்—ஆண்பிள்ளை, சமர்த்தன்.

கொள்-கொடு-கொடுமை—வளைவு, நெறிதிறம்பல், அட்டூழியம். கொடுவாள், கொடுக்காய்ப்புளி முதலியவற்றிற் பருப்பொருட் கோணலையும்; கொடுங்கோல், கொடும்பாடு முதலியவற்றில் நுண் பொருட் கோணலையும்; கொடுமைச் சொல் குறித்தல் காண்க.

கொடு-கொடுக்கு—1. வளைந்த கொட்டும் உறுப்பு; 2. அழகிய ஆடைத்தொங்கல். "கச்சை புனைந்ததிலே விட்டான் பெருங் கொடுக்கு" (திருவாலவா. 30 : 9). 3. தொங்கும் கிழிசல்.

கொடுக்கன்—தேள். கொடுக்கி—தேட்கொடுக்கி என்னும் செடி. கொடுக்கு-ஒ நோ: E. crook, ME. croc, ON. krokr, hook.

கொடு-கொடுகு-கொடுகுதல்—கொடுமையாதல். "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்." (தேவா. 918:1).

கொடு-கொடும்பு—கொடுமை

கொடு-கொடி—வளைந்து நீண்டு வளரும் தண்டு.

கொடு-கொடிறு—வளைந்த பற்றுக் குறடு, பற்றுக் குறடு போன்ற வாயலகு (சுதுப்பு).

கொள்-கொள்கு-கொட்கு கொட்குதல்— 1. சுழலுதல். "வளிவலங்கொட்கு மாதிரம்" (மணி. 12:91). 2. சூழ வருதல். "காலு ணவாகச் சுடரொடு கொட்கும்" (புறம். 43 : 3). 3. சுற்றித் திரிதல். "கொடும்புலி கொட்கும் வழி" (சிறுபஞ். 80). ஒ. நோ: வெள்-வெள்கு-வெட்கு.

கொள்ளுதல்—1. வளைதல், 2. சுழலுதல் 3. திரிதல்.

கொள்-கொட்பு—1. சுழற்சி. "கொட்புறு கலினப் பாய்மா" (கம்பரா. மிதிலை. 13). 2. சுற்றித்திரிகை. (திவா).

கொள்-கொட்கு-கொக்கு—வளைந்த கழுத்துள்ள நீர்ப் பறவை.

www.thamizham.net - Free E book No 7454

கொட்கு-கொட்கி-கொக்கி—வளைந்த கொளுவி. ஒ. நோ கொக்கி-E. hook, OE. hoc, MLG. hok, Du. hock. கொள்-கொட்டை. ஒ.நோ: வள்-வட்டை.

கொட்டை—1. உருண்டு திரண்ட விதை. 2. அவ்விதை போன்ற உறுப்பு. 3. உருண்ட தலையணை, "பஞ்சின் நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பி" (பதிறெ. திருவிடைம. மும். 19). 4. ஆடைத்தும்பின் மணி முடிச்சு. "கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" (பொருந. 155). 5. பாதக் குறட்டின் குமிழ். "பவழக் கொட்டைப் பொற்செருப் பேற்றி" (பெருங். மகத. 22:202). 6. பஞ்சுச் சுருள். 'கொட்டைத் தலைப்பால் கொடுத்து "(திவ். பெரியாழ். 3 : 5 : 1).7. உருண்ட பருவடிவம். கொட்டையெழுத்து; (உ. வ.).

கொள்-கோள்—1. சுற்றிவரும் அல்லது உருண்டையான விண்சுடர் அல்லது வேறுலகம். "எல்லாக் கோளும் நல்வழி நோக்க" (பெருங் இலாவாண. 11 : 70). 2. திங்களைச் சூழும் கோட்டை. "மதியங் கோள்வாய் விசும்பிடை' (சீவக. 1098).

கோள்-கோளம்—1. உருண்டை. 2. உயிர்மெய்களில் (பிராணிகளில்) நீர் சுரக்கும் தசைப்பகுதி.

கோளம்-வ. கோல (gola).

கோளம்-கோளகம்—1. உருண்ட மிளகு. 2. மண்டல விரியன். (பிங்.). கோளகம்-வ. கோலக (மிளகு), கோலக(g) (மண்டல விரியன்)

கோளகம்-கோளகை—1. வட்ட வடிவம், " அண்ட கோளகைப் புறத்ததாய்" (கம்பரா. அகலிகைப் 60). 2. கிம்புரிப் பூண் வளையம். 3. மண்டலிப் பாம்பு. (சூடா.).

கோளகை—வ. கோலக (g).

கோள்-கோளா—1. நறுமணப் பண்டங் கலந்தது ம் இறைச்சி யுள்ளிட்டதுமான உண்டையுணவு 2. கஞ்சாவுருண்டை.

கோள்-கோண்-கோணுதல்—1. சாய்தல். 2. வளைதல். 3. நெறிதவறுதல். 4. மாறுபடுதல். 5. வெறுத்தல். 'கோணிக் கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமற் காணி கொடுப்பது மேல்." (பழ.).

கோண்—1. வளைவு. "கோணுர்பிறை" (திருவாச 16 : 5). 2. கொடுங்கோன்மை. (திவா ). 3. கோணம் " முக்கோ ணிவர்தரு வட்டம்" (குற்ரு: தல. பராசத்.). 3). 4. கூன்

www.thamizham.net - Free E book No 7454

கோணன்-கூனன் (பிங்.).

கோண்-ஒ. நோ: Gk. gonia, angle.

கோண்-கோணம்—1. மூலை. "கோண மொத்திலங்கோர் முழத்தினின்" (திருவாலவா. 15 : 2). 2. ஒதுக்குப் புறமான இடம். கோணம்-வ. கோண.

கோணம்-காணம்—1. வளைந்த கொள்ளுக்காய். 2. கொட் பயறு (பாண்டிவழக்கு).

கோண்-கோணை—1. வளைவு. 2. கோணல் 3. கொடுமை. (அக.நி.). 4. தொல்லை. "கோணை பெரிதுடைத்தெம் பெருமானைக் கூறுதலே" (திவ் திருவாய். 2 : 5 : 10.)

கோணை-கோணையன்—மாறுபட்ட குணஞ் செயல் கருத்துடையவன்.

கோண்-கோடு. ஒ.நோ: பாண்-பாடு.

கோடுதல்—1. கோணுதல், 2. வளைதல். "கொடும் புருவங் கோடா மறைப்பின்" (குறள். 1086)2. நெறி அல்லது நடுநிலை தவறுதல். "கோடாருங் கோடிக் கருவினைய ராகியார்ச் சார்ந்து" (நாலடி. 124), "கோடாமை சான்றோர்க் கணி" (குறள். 118): 3. சூழ்தல். 4. வட்டமாதல்.

கோடு—1. வளைவு. 2. வளைந்த சங்கு. "கோடு முழங் கிமிழிசை யெடுப்பும்" (பதிற்றுப். 50 : 25.). 3. பிறைமதி. "கோடு மிலைந்தான்" (திருக்கோ. 149). 4. விலங்கின் கொம்பு. "கோட்டிடை யாடினை கூத்து" (திவ். இயற். திருவிருத். 21). 5. யானை மருப்பு (தந்தம்). "மத்த யானையின் கோடும்" (தேவா. 39 : 1)6. மரக்கிளை. (பிங்) 7. யாழ்த்தண்டு. "மகர யாழின் வான்கோடு தழீஇ" (மணி 4 : 56). 8. எழுத்தின் கொம்புக் குறியீடு. "விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும்" (தொல். எழுத். 17, உரை), 9. மயிர்ச் சுருள்முடி. "குறற் கூந்தற் கோடு" (கலித். 72 : 20). 10. வளைந்த குளக்கரை. "கோடின்றி நீர் நிறைந்தற்று" (குறள். 523). 11. குளம். "கோடெலா நிறையக் குவளை மலரும்" (தேவா. 425 : 4). 12. ஆடைக்கரை. கொடுந்தானைக் கோட்டழகும்" (நாலடி. 131). 13. வரம்பு. (பிங்). 14. வரி. 15. வட்டாடும் கட்டம். "கோடின்றி வட்டாடல் கொள்வ தொக்கும்" (தாயு. நினை. 2). 16. காலவட்டம். "கலியுகக் கோட்டுநாள்" (T.A.S.H.O.P. 5). 17. நடுநிலை திறம்புகை. "கோடி நிக் கூற்றம்" (நாலடி. 5). 18. கொடுமை. கோட ற

www.thamizham.net - Free E book No 7454

வைத்த கோடாக் கொள்கையும்" (பதிற்றுப். 37:11). 19. வரம்பு போன்ற பக்கம். "கோடுய ரடுப்பு (புறம். 164).

கோடு-கோட்டம்—1. வளைவு. "மரத்தின் கனக்கோட்டத் தீர்க்கு நூல்" (நன். 25), மிதி வண்டிச் சக்கரம் கோட்டம் பட்டிருக் கிறது. (உலகவழக்கு). 2. வணக்கம் (உடல்வளைவு). "முன்னோன் கழற்கே கோட்டந் தருநங் குருமுடி வெற்பன்" (திருக்கோவை, 156. 3. வணருறுப்புள்ள அல்லது வளைந்த தண்டுள்ள யாழ். (பிங்,) 4. வளைந்த அல்லது சூழ்ந்த குளக்கரை அல்லது ஏரிக்கரை. "உயர் கோட்டத்து............வான் பொய்கை" (பட்டினப். 36). 5. மனக் கோணல். "உட்கோட்ட மின்மை பெறின்" (குறள். 119). 6. நடுநிலை திறம்புகை. "கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது." (தேவா. 1182 : 2). 7. வேலி சூழ்ந்த தோட்டம். (பிங்.). 8. அரண்வேலி சூழ்ந்த பாசறை. [பிங்.]. 9. மதில் சூழ்ந்த பள்ளிபடை அல்லது கல்லறை. "சுடும ணோங்கிய நெடுநிலைக் கோட்டமும்" [மணி. 6 : 59] 10. மதில் சூழ்ந்த கோயில். "கோழிச் சேவற் கொடியோன் கோட்ட மும்" (சிலப். 14 : 10). 11. மதில் சூழ்ந்த சிறைச்சாலை. "கோன்றமர் நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்க" [சீவக. 262]. 12. சாலை. "அருஞ்சிறைக் கோட்டத் தகவயிற் புகுந்து" [மணி. 19 : 133], "அறஞ்செய் கோட்டம்" [மணி. பதிகம், 72]. 13. மதில் சூழ்ந்த நகர். [பிங்.]. 14. வட்டாரம் அல்லது மண்டலம் என்னும் நாடு. [பிங்]. 15. மதில் சூழ்ந்த இடம். 16. இடம். [பிங்].

இங்ஙனம், கோயிலைக் குறிக்கும் கோட்டம் என்னும் சொல், உல் என்னும் மூல வேரினின்றும் குல் என்னும் அடிவேரினின்றும் தோன்றிய தூய தென்சொல்லாயிருப்பினும், பிராமணத் தமிழ்ப் புலவர் வையாபுரி(ப் பிள்ளையை)த் துணைக்கொண்டு, நாலிலக்கத் திற்கு மேற்பட்ட செலவில், கால் நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலத் தில், தமிழ் சமற்கிருதக்கிளையென்னும் கருத்துப்படத் தொகுத்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி, அதை ஆரிய மரபுப் படி 'கோஷ்ட்ட' (koshtha) என்று திரித்து வட சொல்லாகக் காட்டி யுள்ளது.

மானியர் உவில்லியம்சு சமற்கிருத-ஆங்கில அகரமுதலி யில், 'கோஷ்ட்ட' என்னுஞ் சொற்கு மூலமென வினாக்குறியுடன் ஐயுறவாகக் காட்டப்படுஞ் சொல், to tear asunder, to pinch, to

www.thamizham.net - Free E book No 7454

force or draw out, extract, to knead, to test, examine(?), to shine(?), to gnaw, nibble, to weigh, balance என்று பொருள் குறிக்கப்பட்டுள்ள 'குஷ்' என்பதே. குஷி [வயிறு], கோச [உறை] என்பன உறவுச் சொற்களாயிருக்கலாமென்றுங் குறிக்கப்பட்டுள்ளது. அறிஞர் இதன் புரைமையைக் கண்டு கொள்க.

கோயில், கோட்டம், நகரம், குடிகை, நியமம் என்பன ஒரு பொருட் சொற்களாகச் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் ஆளப்பட்டுள்ளன. இவற்றுள் 'நியமம்' ஒன்றே வடசொல். ஆயினும் அதற்கு முன்னுள்ள முச்சொல்லும் வடசொல்லேயென்று துணிந்து ஏமாற்றுவர் ஆரியர்.

ஆரியம், சமற்கிருதம், கீர்வாணம், தேவபாடை, வடமொழி என்பன ஒரு பொருட் சொற்கள்.

## 4. சமற்கிருத வரலாற்றுச் சுருக்கம்.

ஒரிலக்கம் ஆண்டுகட்கு முன் மாந்தன் தோன்றியதும், ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழன் தோன்றியதும், ஒரு காலத்தில் இந்தியாவை ஆத்திரேலியாவோடும் தென்னாப்பிரிக்கா வோடும் இணைத்துக் கொண்டிருந்ததும், இந்துமாவாரியிலும் அமைதிமாவாரியிலும் மூழ்கிப்போன (மேலையர் 'இலெமுரியா' (Lemuria) என்னும்) குமரிக் கண்டமே.

குமரிக்கண்ட அநாகரிக மாந்தர் முன்பும், பண்பட்ட தமிழ் மக்கள் பின்பும், பல்வேறு நிலையில் பல்வேறு காலத்தில் பல்வேறு திசையாகச் சென்று பார்முழுவதும் பரவிப் போயினர்.

பனிமலைப் பக்கமாக வடதிசை நோக்கிச் சென்ற தமிழர், நாளடைவில் திரவிடராகத் திரிந்தனர். அவருள் ஒரு சாரார் வடமேற்காக ஐரோப்பா நோக்கிச் சென்று ஆரியராக மாறினர். அவருள் ஒரு வகுப்பார் கிரேக்கத்திற்கு மிக நெருங்கிய ஒரு மொழியைப் பேசிக் கொண்டு, கி. மு. 1500 போல் இந்தியாவிற்குட் புகுந்தனர்.

அவர் ஆடுமாடு மேய்க்கும் முல்லை நிலையில் எழுத்தின்றியும் சிறு தெய்வங்களை வணங்கிக் கொண்டும் அரை நாகரிகராகவே இருந்தனர். அவர் சிறு கூட்டத்தாராயிருந்ததனால், பேரினத்தாராகிய வடநாட்டுப் பழங்குடி மக்களொடு கலந்தபின் தம் தாய் மொழியை மறந்துவிட்டு, பிராகிருதம் என்னும் முந்து திரவிட மொழியையே

www.thamizham.net - Free E book No 7454

பேசினர். ஆயின், அவருட் பூசகர் மட்டும், பழங்குடி மக்களின் பேதைமை, மதப்பித்தம், கொடைமடம் ஆகிய குணங்களைப் பயன் படுத்திக்கொண்டு, தம்மை நிலத் தேவரென்றும் தம் முன்னோர் மொழியைத் தேவமொழியென்றும் கூறி ஏமாற்றி, தம்மை அளவிறந்து உயர்த்தி, அப்பழங்குடி மக்களை அடிமையராகத் தாழ்த்தி விட்டனர். இங்ஙனம் செய்தற்கு, அவர் வெண்ணிறமும் அவர் முன்னோர் மொழியின் எடுப்பொலியும் துணை நின்றன.

பழங்குடி மக்களுள் தம் தலைமையை ஏற்றுக்கொள்ளாதவரை, ஏற்றுக் கொண்டவரைக் கொண்டே போரிட்டு அடக்கியும் விட்டனர். தமிழ நாகரிகம், தலைசிறந்துள்ள தென்னாட்டிலும், ஆங்கிலராட்சியால் அறிவியற் கல்வி பெற்று ஆராய்ச்சி செய்யும் இன்றும், ஆரியச் சார்பான தமிழரும் திரவிடரும் அச்சார்பில்லரித் தம் இனத்தாரையே வன்மையாக எதிர்த்து நிற்றலை நோக்கித் தெளிக.

இந்திய ஆரியர், முதற்கண் அக்கினி, வருணன், மித்திரன், உருத்திரன், இந்திரன் முதலிய சிறுதெய்வங்கட்கு விலங்குகளை வேள்வியிற் படைப்பதையே மதமாகக் கொண்டிருந்தனர். அவ் வேள்விகளில் அவர் பாடிய சிறு தெய்வ வழுத்துத் தொகுப்பே பிற்காலத்தில் 'வேதம்' எனப்பட்டது. வேதக்காலத்திலேயே ஆரியப் பூசகருள் ஒரு சிலர் தென்னாடு வந்து தமிழரின் சிறந்த நாகரிகத்தைக் கண்டு கொண்டதனால், தமிழ் மதங்களாகிய சிவநெறியையும் திருமால் நெறியையும் படிப்படியாகத் தழுவலாயினர். ஆயின், முத்தொழிலிறைவன் என்றே தமிழர் வழிபட்ட சிவனையும் திருமாலையும், அழிப்புத் தெய்வமும் காப்புத் தெய்வமுமாக முறையே ஒடுக்கி, தாம் புதிதாகப் படைத்த பிரமன் என்னும் படைப்புத் தெய்வத்தொடு சேர்த்து, முத்திருமேனிக் கொள்கையைத் தோற்றுவித்து, இரு தமிழ மதங்களையும் இந்துமதமென ஒருமைப்படுத்தித் தமதாக்கிக் கொண்டனர்.

தமிழரின் அகப் பொருளிலக்கணத்திற் கூறப்பட்டுள்ள, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகைத் தொழில் தலைவர் பாகுபாட்டை, பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நாற்பாற் பிறவிக் குலமாகத் திரித்து, இந்தியப் பழங்குடி மக்களையெல்லாம் வெண்மை செம்மை பொன்மை கருமை என்னும் நிற அடிப்படையில், முன்னர் நால்வேறு வரணங்களாகவும் பின்னர் நூற்றுக் கணக்கான நிலைத்த குலங்களாகவும் பிரித்து, சின்னபின்ன

www.thamizham.net - Free E book No 7454

மாகச் சிதைத்து, அடியோடு அவர் ஒற்றுமையைக் குலைத்து விட்டனர். இதற்குத் துணையாக இருந்தவர், முதுகுடுமிப் பெருவழுதியும் பெருநற்கிள்ளியும் பல்யானைச்செல்கெழுகுட்டுவனும் போன்ற தமிழக மூவேந்தரே.

ஆரியரின் முதலிலக்கியம், முதற்கண் ஒன்றுயிருந்து பின்னர் மூன்றுகவும் இறுதியில் நான்காகவும் வகுக்கப்பட்ட வேதமே. அது, இறந்துபட்ட அவர் முன்னோர் மொழியும் வடநாட்டுப் பழந்திரவிடமாகிய பிராகிருதமும் கலந்த, இலக்கியக் கலப்புநடை மொழியில் இயன்றதாகும். அதில் எகர ஒகரக் குறிலின்மை, அதன் பிராகிருதக் கூற்றின் பெரும்பான்மையைக் காட்டும்.

தமிழர் பல்துறைப்பட்ட நாகரிகமும் பண்பாடும் தலை சிறந்து, உருவ வணக்கமும் உருவிலா வணக்கமுங் கொண்ட கடவுள் மதத்தைக் கடைப்பிடித்து வந்ததைக் கண்ட ஆரியர் [பிராமணர்], தமக்கென ஒரு பல்துறையிலக்கியம் இருந்தாலன்றித் தமிழரை நிலையாக அடிப்படுத்த வியலாதென்று கண்டு, அதற்கேற்ற சொல்வளம் வேதமொழியில் இன்மையால், ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களைக் கடன்கொண்டும் அவற்றினின்று நூற்றுக் கணக்கான சொற்களைத் திரித்துக் கொண்டும், வேத மொழியொடு தமிழ் கலந்த சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கை இலக்கியக் கலவை நடைமொழியில், முதலிரு கழக இலங்கு நூல்களையெல்லாம் மொழி பெயர்த்துக் கொண்டு, மொழிபெயர்ப்பையே முதனூலென்றும், சமற்கிருதம் தேவமொழியாதலால் அதிலுள்ள சொற்களெல்லாம் சமற்கிருதமேயென்றும், ஏமாற்றி விட்டனர். எதிர்காலத்தில் கண்திறந்து எதிர்க்கும் தமிழர்க்குச் சான்றுகாவாறு, ஆயிரக்கணக்கான முதலிரு கழக நூல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன.

வேதமொழி வேறு; சமற்கிருதம் வேறு. தமிழ் வரலாறறியாத மேலை மொழி நூலார், வேதமொழியை வேதச் சமற்கிருதம் [Vedic Sanskrit] என்பது, முற்காலப்படுத்தம் [Prochronism] என்னும் குற்றமாகும். பழங்குடி மக்கள் மொழி ஆரியர் வருகைக்கு முந்திச் செய்யப்பட்டதென்னும் கருத்துப்பற்றிப் பிராகிருதம் என்றும் ஆரியர் இலக்கியமொழி வேதமொழியுந் தமிழும் கலந்து செய்யப் பட்டதென்னும் கருத்துப்பற்றிச் சமற்கிருதம்என்றும் பெயர் பெற்றன.

www.thamizham.net - Free E book No 7454

ப்ரா = முன். ஸம் = கல. கிருத = செய்யப்பட்டது.

சமற்கிருதச் சொற்களுள், ஐந்திலிருபகுதி தமிழ்; ஒரு பகுதி மேலையாரியம்; ஒரு பகுதி பிராகிருதம்; ஒரு பகுதி புதிதாகப் புனைந்தது.

ஆரிய மொழியில், மூவேறு காலத்தில் தமிழ்ச் சொற்கள் கலந்தன.

1. திரவிடநிலை.
2. வேதநிலை.
3. சமற்கிருதநிலை.

முதன் முதலாக ஆரியம் எனப் பெயர் பெற்றது இந்திய ஆரியமே. சென்ற நூற்றாண்டில் மாக்கசு முல்லரே, அதற்கினமான ஐரோப்பிய மொழிகட்கெல்லாம் அப்பெயராட்சியை விரிவுபடுத்தினர்.

தமிழ் முந்தியதென்றும், பிராகிருதம் இடைப்பட்டதென்றும், இந்திய ஆரியம் கடைப்பட்டதென்றும், அறிதல் வேண்டும்.

எ-டு:

| தமிழ் | பிராகிருதம் | இந்திய ஆரியம் |
|---|---|---|
| வட்டம் | வட்ட | வ்ருத்த |
| நடி-நடம்-நட்டம் | நட்ட | ந்ருத்த |

இவ்வுண்மை அறியாதார், தமிழ்ச் சொல்லைப் பிராகிருத வழியாக இந்திய ஆரியத்தினின்று தலைகீழாகத் திரிப்பர்.

எ-டு. வ்ருத்த-வட்ட-வட்டம்.

வல்-வள்-வட்டு-வட்டம் என்னும் வரலாற்றைத் தமிழில்தான் காண முடியும்.

மொழியென்பது மாந்தர் தொடர்பற்ற தனிப் பொருளன்று. ஒரு கூட்டத்தார் அல்லது இனத்தார், தம் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வாயிற்கருவியாகக் கையாளும் ஒலித்தொகுதியே மொழி. அது பிறப்பதும் வாழ்வதும் மக்கள் வாயே. ஒரு மொழியைப் பேசினால் அது வாழும்; இன்றேல் மாளும்.

பேசுவதென்பது, ஒரு கூட்டத்தார் பிள்ளைப் பருவத்தில் இயல்பாகவும் எண்ணாதும் பிறர்வாயினின்று அறிந்து வழங்குவதேயன்றி, பிற்காலத்தில் ஓரிருவர் நூல் வாயிலாகக் கற்று மொழிவதன்று.

பேசா மொழியெல்லாம் இறந்த மொழியே. இனி, பேசா மொழிகளாகச் சில செயற்கை மொழிகளும் உள. அவை இலக்கிய நடை

www.thamizham.net - Free E book No 7454

மொழியாகிய சமற்கிருதமும் புதுப்புனைவு மொழியாகிய எசுப்பெரேன்ரோவும் [Esperanto], போல்வன. அவை பிறந்தனவுமல்ல; இறந்தனவுமல்ல; உயிரற்ற பாவை போல்வனவே.

மொழி மக்கள் வாயினின்று தோன்றுவதால், உலக மொழிகளெல்லாம் மக்கள் மொழிகளே. இம் மண்ணுலகில் எங்கேனும் தேவரின்மையால், தேவமொழியுமில்லை. பிராமணன் நிலத்தேவன் என்பது எங்ஙனம் முழுப்பொய்யோ, அங்ஙனமே அவன் முன்னோர் வாயினின்று வந்த மொழியும் தேவ மொழியென்பது முழுப் பொய்யே.

மொழியென்பது ஒலித்தொகுதியே. ஒலிகளெல்லாந் தோன்றி மறையுந் தன்மையன. நீர்மேலெழுத்துக் கண்ணிற்குத் தோன்றி மறைவது போன்றே, ஒலியும் செவிக்குத் தோன்றி மறையும். நாடாப் பதிவானிற் பதிந்தவொலியும் தோன்றி மறைவதே.

ஏட்டிலுங் கல்லிலும் எழுதும் வரிவடிவும், சில பலநாள் நிலைத்திருப்பினும், படிப்பாரும் விளக்குவாருமின்றிப் பயன்படுவதுமில்லை; தானாக எங்கும் இயங்குவதுமில்லை. ஆதலால், வேதங்கள் பூசித்துப் பூட்டிட்டது மறைக்காடு [வேதாரணியம்] என்பது ஆமை மயிர்க் கயிற்றால் கொம்புக் குதிரையைக் கட்டினது போன்றதே. மரை யென்பது மான்வகை. அது மிகுந்த மரைக்காடு என்பதே, மறைக் காடு எனத் திரிக்கப்பட்டுக் கதையுங் கட்டப்பட்டது.

இனி, வேதம் இறைவன்போல் தொடக்கமிலி. அதன் மந்திரங்கள், முனிவராற் காணப்பட்டனவேயன்றி இயற்றப் பட்டனவல்ல; என்பதோவெனின், ஈடிணையற்ற மாபெரும் பொய்யாகும். திருவள்ளுவமாலையில் வெள்ளி வீதியார் என்னும் பெயரிலுள்ள பாவில், வேதத்தைச் "செய்யா மொழி" என்றது, ஆரிய அடிமைத் தமிழரின் பேதமையையும் மூடநம்பிக்கையையுமே காட்டும்.

உலகில் தேவமொழியென்று சொல்லத்தக்க உயர்மொழி ஒன்றுண்டெனின், அது குமரி நாட்டுக் குமரித் தமிழே.

## 5. திருவள்ளுவர் பெருமை.

### (1) தமிழர் மீட்பர்

பிராமணர் தமிழரை நால்வரணக் கூண்டுகட்குள் அடைத்த பின், அவர் என்றும் அவற்றினின்று வெளியேறாதிருத்தற் பொருட்டு,

www.thamizham.net - Free E.book No 7454

நால்வரணப் பூத வடிவங்களை, மதுரைக் கோட்டை மதில் வாயில் நான்கிலும், நாடக வரங்குகளிலும், கல்லறைகளிலும், எழுதி வைத்தனர்.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்" (புறம். 183)
"பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்"
[சிலப். 22 : 109]

"நித்திலப் பைம்பூண் நிலாத்திகழ் அவிரொளித்
தண்கதிர் மதியத் தன்ன மேனியன்
..............................................
ஆதிப்பூதத் ததிபதிக் கடவுளும்
..............................................
புவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்
..............................................
அரைச பூதத் தருந்திறற் கடவுளும்
செந்நிறப் பசும்பொன் புரையு மேனியன்
..............................
விளங்கொளிப் பூத வியன்பெருங் கடவுளும்
கருவிளை புரையும் மேனியன்............
மண்ணுறு திருமணி புரையு மேனியன்
..............................
கலிகெழு கூடற் பலிபெறு பூதத்
தலைவ னென்போன் தானுந் தோன்றி
..............................
நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர" (சிலப். 22: 16-108)

"தோற்றிய அரங்கில் தொழுதன ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து" (சிலப். 3: 106-7)

இதன் (அடியார்க்கு நல்லார்) உரை;

"அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்பட்ட நால்வகை வருணப் பூதரையும் எழுதி, மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்கவைத்தென்க."

"என்னை?

கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்
காடுநர்க் கியற்று மரங்கி னெற்றிமிசை
வழுவில் பூத நான்கும் முறைப்பட
எழுதின ரியற்ற லியல்புணர்ந் தோரே"

என்றாராகலின்.

www.thamizham.net - Free E book No 7454

" அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"
(மணி. 6 : 54-59.)

இப் பாடல்கள் திருவள்ளுவர் காலத்திற்குப் பிந்தினவாயினும், இவற்றுட் சொல்லப்பட்டுள்ள நிலைமை அவர் காலத்திற்கு முந்தியதே.

இங்ஙனம் தமிழரைத் தாழ்த்தி அவரொற்றுமையைக் குலைத்த கொடுமையைக் கண்ட திருவள்ளுவர், அதைக் கண்டித்து,

" பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.' [குறள். 972]
" மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (குறள். 973)
" பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து." (குறள். 978)
" ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்." (குறள். 133)
" மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்." (குறள். 134)
" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்." (குறள். 1033)
" இரவார் இரப்பார்க்கொன் றீவர்... (குறள். 1035)

என்றும்,

பிராமணரே துறவிற்குரியவர் என்றதை மறுத்து,

" அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்." (குறள். 30)

என்றும்,

துறவறத்தால் மட்டும் வீடு பெறலா மென்றதை மறுத்து,

" அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்." (குறள். 46)
" அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று' (குறள். 49)

என்றும்,

www.thamizham.net - Free E book No 7454

பிராமணன் வேதம் ஓதுவதனாலேயே மற்ற மூவருணத்தாரும் வாழ்கின்றனர் என்றதை மறுத்து,

" உழுவார் உலகத்திற் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து." (குறள். 1032)

" இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை " (குறள். 41)

" துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை." (குறள். 42)

என்றும்,

பிராமணன் வேள்வி செய்வதனாலேயே உலகில் மழை பெய்கின்றதென்றதை மறுத்து,

" இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு." (குறள். 545)

" முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (குறள். 559)

என்றும், திருக்குறளியற்றித் தமிழரை மீட்டார்.

2. வாழ்க்கை வழிகாட்டியார்.

" கோளில் பொறியிற் குணமிலவே. .." (குறள். 9)
" எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப....." ( " 392)
" கற்றில னாயினுங் கேட்க,...." ( " 414)
" மங்கல மென்ப மனைமாட்சி... " ( " 60)
" மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்...." [ " 904]
" இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்...." [ " 920]
" பகைபாவம் அச்சம் பழியென நான்கும்.... " [ " 146]
" தந்தை மகற்காற்றும் நன்றி...." [ " 67]
" மகன்றந்தைக் காற்றும் உதவி..." [ " 70]
" ஒண்பொருள் காழ்ப்ப...." [ " 760]
" முயற்சி திருவினை யாக்கும்..." [ " 616]
" பொருள்கருவி காலம்..." [ " 675]
" எண்ணித் துணிக கருமம்" [ " 467]
" அடுக்கி வரினும்..." [ " 625]
" ஒல்லும் வகையால் அறவினை யோவாதே..." [ " 33]
" ஆக்கமுங் கேடும்..." [ " 642]
" தன்னெஞ் சறிவது பொய்யற்க... " [ " 293]
" உள்ளத்தா லுள்ளலுந் தீதே..." [ " 282]

www.thamizham.net - Free E book No 7454

" இன்னாசெய் தாரை யொறுத்தல்..." [குறள். 314]
" செய்யாமற் செய்த உதவிக்கு..." [ ,, 101]
" நல்லினத்தி னூங்குந் துணையில்லை..." [ ,, 460]
" ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை..."
[ ,, 792]
" அளவளா வில்லாதான் வாழ்க்கை... [ ,, 523]
" அரியவற்று ளெல்லாம் அரிதே... [ ,, 443]
" மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு... [ ,, 942]
" தோன்றின் புகழொடு தோன்றுக...." [ ,, 236]

இக் குறள்களும் இவை போன்ற பிறவும், ஒருவன் உலகிற் செம்மையாகவும் சிறப்பாகவும் இன்பமாகவும் வாழச் சிறந்த வழி காட்டுவனவாகும்.

3. திருமறை யாசிரியர்.

திருக்குறள், வீடுபேற்றிற் கின்றியமையாத எல்லாம் வல்ல இறைவன் வழிபாட்டையும், இல்வாழ்க்கைக்குரிய அறங்களையும், துறவு நெறிக்குரிய அறவொழுக்கங்களையும், நிறைவாகக் கூறி, இன்பத்துப் பாலால் திருக்கோவை போல் உவமை வாயிலாகப் பேரின்பத்தை யுணர்த்தும் திருமறையாகும்.

4. மெய்ப்பொருளறிஞர்.

தன்வயத்தல், தூய்மை, இயற்கை முற்றறிவு, இயல்பாகக் கட்டின்மை, பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம், எங்கு முண்மை, பகாமை என்னும் தொண்குணத்தனும், தனக்குவமை யில்லாத முழுமுதற் கடவுள், எல்லாம் வல்லனுதலின், அவனை எழு கூறுகப் பகுக்கும் ஆரிய முறையை மறுத்து, ஐம்பூதமும் ஐம்பூதத் தன்மையும் அறிவுப் பொறியைந்தும் கருமப் பொறியைந்தும், அவற்றையறியும் ஆதனும் (புருடனும்), அவன் அறிதற் கருவி யாகிய மதியுள்ள மனநானுணர்வுகளும் ஆகிய இருபத்தைந்தொடு, காலம் இறைவன் என்னும் இரண்டையுங் கூட்ட, மெய்ப்பொருள் மொத்தம் இருபத்தேழெனும் கருத்துப்பட,

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. [குறள். 27]

எனத் திருவள்ளுவர் கூறியிருப்பது, அவர் ஒருவரே உண்மையான தெளிந்த மெய்ப்பொருளறிஞர் என்பதைக் காட்டும்.

ஊழ் என்பது வினையுள் அடங்கும்.

www.thamizham.net - Free E book No 7454

5. செந்தண்மை அந்தணர்.

தன்னூன் பெருக்கற்கு... (குறள். 251)
இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்... ( „ 1062)

என்னுங் குறள்கள் உணர்த்தும் ஆசிரியருணர்ச்சியை ஊன்றி நோக்கின்,

அந்தண ரென்போர் அறவோர்... [குறள். 30]

என்னுங் குறட்குத் திருவள்ளுவரே சிறந்த எடுத்துக் காட்டெனத் தோன்றுகின்றது.

6. தெய்வப் புலவர்.

திருவள்ளுவ மாலையில், நக்கீரர் பெயரிலுள்ள

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆன அறமுதலா அந்நான்கும்-ஏனோர்க்கு
ஊழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்றும் மற்று.

என்னும் பாவும், மாமூலனார் பெயரிலுள்ள

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளார் அறிவுடை யார்.

என்னும்பாவும், கல்லாடர் பெயரிலுள்ள

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி.

என்னும் பாவும், உருத்திரசன்ம கண்ணர் பெயரிலுள்ள

மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்
காய்தொறும் ஊறும் அறிவு.

என்னும் பாவும், மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார் பெயரிலுள்ள

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கிருள்மா லைக்கும் பெயர்.

www.thamizham.net - Free E book No 7454

என்னும் பாவும், திருவள்ளுவரின் தெய்வப் புலமையை ஒருவா றுணர்த்தும்.

7. முதற் பாவலர்.

*காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்*
*பேசும் உலாவிற் பெதும்பைபுலி—ஆசு*
*வலவர்க்கும் வண்ணம் புலியாமற் றெல்லாப்*
*புலவர்க்கும் வெண்பாப் புலி.*

என்பது, ஔவையார் ஒருவர் பெயரிலுள்ள பழம்பாட்டு.

பாவிற்குச் சிறந்த வெண்பாவிலுங் குறுகிய வகையான குறட் பாவில், திருவள்ளுவர் விரிந்த பொருளையமைத்திருப்பது, அவரின் முதற்பாவன்மையைச் சிறப்பக் காட்டும்.

எ—டு :

*நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்*
*வித்தகர்க் கல்லா லரிது.* (குறள். 235)

இதனைக் கபிலர் பெயரிலுள்ள

*திணையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட*
*பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு*
*வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்*
*வெள்ளைக் குறட்பா விரி.*

என்னும் வள்ளுவமாலைப் பாவுந் தெரிவிக்கும்.

8. தமிழ்நாட்டுத் திருப்புரவலர் (Patron Saint).

ஒவ்வொரு நாட்டிற்கும் திருப்புரவலர் அல்லது காவல் தூயர் ஒருவர் உளர். தமிழ்நாட்டுத் திருப்புரவலர் திருவள்ளுவரே. அவர் முக்கால அரசியல் அறிஞராதலால், இக்காலத்திற்கும் ஏற்றவாறு அரசியலமைப்பைத் தம் நூலிற் கூறியேயுள்ளார்.

முதல் மாந்தன் குடும்பம் தோன்றியதிலிருந்து, அரசும் தோன்றி, குடும்பத் தலைவன், ஊரன் (கிழவன்), நாடன், வேள், மன்னன், கோ(கோன்), வேந்தன் எனப் படிப்படியாக வளர்ந்து, செங்கோலன், கொடுங்கோலன், முற்றதிகாரி, மட்டதிகாரி என இடையிடையே மாறி, இன்று பெரும்பாலும் பாராளுமன்றக் கோவரசு, பாராளுமன்றக் குடியரசு, மக்களாட்சிக் குடியரசு, கூட்டுடைமைக் குடியரசு என நால்வகைப் பொறுப்பாட்சிப் பொது மக்களரசாகத் திருந்தியுள்ளது.

www.thamizham.net - Free E book No 7454

மக்கள் தொகை மிக்க இக்காலத்திற்குப் பொதுவாக ஏற்றது கூட்டுடைமையாட்சியே.

கார்ல்மார்க்கசும் இலெனினும் போன்றவர் இந்நூற்றாண்டில் வகுத்த கூட்டுடைமை சிறப்பாக ஆலைத் தொழிலாளர் நிலைமை நோக்கியதே; திருவள்ளுவர் இருபது நூற்றாண்டுகட்கு முன்னரே வகுத்த கூட்டுடைமையோ, எல்லாத் தொழிலாளர்க்கும் அலுவலர்க்கும் பொதுவானதாகும்.

*பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்* குறள். 44
*பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்...* குறள். 227
*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்* குறள். 322
*தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்* குறள். 1107
*" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்..."* ,, 1063

என்னுங் குறள்கள் கூட்டுடைமை பற்றியனவே. இதன் விரிவை என் 'மண்ணில் விண்' என்னும் நூலிற் காண்க. இனி,

*" பிரித்தலும் பேணிக் கொளலும் "*

என்னுங் குறளும் (633) எக்காலத்திற்கும் ஏற்றதே.

## 9. திருக்குறள் ஒப்புயர்வற்ற நூல்.

ஆரிய வேதத்தையும் பகவற்கீதையையும் மனுதரும சாத்திரத்தையும், பலரும் சிலரும் திருக்குறளுக்கு இணையாகக் கூறுவர். அவர் அறியார்.

வேதம் பிள்ளைத்தனமான எளிய கருத்துக்களுள்ள சிறு தெய்வ வழுத்துத் திரட்டு. திருக்குறளோ, எல்லாம் வல்ல மூத்தொழி லிறைவன் வழுத்தொடு கூடிய தலைசிறந்த அறநூல். கட்குடி திருக்குறளில் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. இருக்கு வேதத்திற் சோமம் என்னும் கட்சாறே, 110 மந்திரப் பதிகங்களில் சிறு தெய்வமாக வழுத்தப்பட்டுள்ளது.

திருக்குறள் பிறப்பாற் சிறப்பில்லை என்பதை வற்புறுத்திக் கூறுகின்றது; பகவற்கீதையோ, மிக நுட்ப வலக்காரமாக, நால் வரணப் பாகுபாட்டை இறைவன் படைத்த பிறவிக்குலமெனக் காட்டுகின்றது.

மனு தரும சாத்திரம் உலகிற் கடைப்பட்ட அறக்கேடான நஞ்சு நூல். அது பிராமணரைத் தெய்வமாக உயர்த்தியும் சிறந்து வாழ வைத்தும், பிறரை விலங்காகத் தாழ்த்தியும் அடிமைத்தனத்திலும் அறியாமையிலும் வறுமையிலும் வருந்தவைத்தும், மகிழ்ந்து

www.thamizham.net - Free E book No 7454

பெருமை கொள்வது. அதிலுள்ள பொருளாட்சிக் கொள்கைகளும் கருத்துக்களும், இறப்ப இழிந்தவை; அறக்கொடியவை.

எ-டு :

"சிலர் பயிரிடுதலை நல்லதொழிலென்று கருதுகின்றனர். அந்தப் பிழைப்புப் பெரியோரால் இகழப்பட்டது. ஏனெனின், இரும்பை முகத்திற் கொண்ட ஏரும் மண்வெட்டியும் நிலத்தையும் நிலத்திலுள்ள பற்பல பூச்சி புழுக்களையும் வெட்டுகின்றனவன்றோ!"

(மனுதருமசாத்திரம், 10 : 84.)

## 10. திருக்குறள் தமிழ்மறையே.

திருக்குறள் பொதுமறையெனப் பெயர் பெற்றிருப்பினும், அது தமிழரை ஆரிய அடிமைத்தனத்தினின்று மீட்கும் தமிழ்மறையாகவே இயற்றப்பட்டது. தமிழர் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தலைசிறந்திருந்ததனால், திருவள்ளுவர் நடுநிலையாக இயற்றிய தமிழ்மறை தானாக உலகப் பொதுமறையாயிற்று. அதனாலேயே,

*பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு*
*தெரிந்து திறந்தொறும் சேரச்-சுருங்கிய*
*சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்*
*வல்லாரார் வள்ளுவரல் லால்.*

*இன்பமுந் துன்பமும் என்னும் இவையிரண்டும்*
*மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா*
*துள்ளி புணர வுரைத்தாரே ஓதுசீர்*
*வள்ளுவர் வாயுறை வாழ்த்து.*

*அறந்தகளி ஆன்ற பொருள்திரி யின்பு*
*சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு-குறும்பாவா*
*வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்*
*உள்ளிருள் நீக்கும் விளக்கு.*

*பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத*
*மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே-முப்பாலில்*
*தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்*
*வையத்து வாழ்வார் மனத்து.*

*வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும்*
*தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்-தெள்ளமுதம்*
*உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்*
*வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து.*

என்னும் வள்ளுவமாலைப் பாக்கள் எழுந்தன.

www.thamizham.net - Free E book No 7454

*வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு*

என்று, பாவலர் சுப்பிரமணிய பாரதியார் பாடியதும் அவ்வகையிலேயே.

*"ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை*    (குறள் 656)

என்னுங் குறளுரையில்,

"இறந்த மூப்பினராய இருமுதுகுரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண், தீயன பலவுஞ் செய்தாயினும் புறந்தருக வென்னும் அறநூற் பொதுவிதி, பொருணூல்வழியொழுகுதலும் அரசர் தொழிற்குரிய ராதலும் நன்குமதிக்கற் பாடுமுடைய அமைச்சர்க் கெய்தாமைபற்றி, இவ்வாறு கூறினார்." என்று, ஆரிய முறைப்படி உரைகூறும் பரிமேலழகரும் சிறப்புக் குறிப்பு வரைந்திருப்பதால், திருவள்ளுவர், அமையம் வாய்க்கும் போதெல்லாம், ஆரியக் கொள்கையைக் கண்டித்துத் தமிழ் மரபை நாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டவர் என்பது, தெள்ளத் தெளிவாம்.

பரிமேலழகர் அறநூல் என்றது மனுதரும சாத்திரத்தை. தருமநூலென்று ஆரியர் கூறுவனவெல்லாம் அத்தரும நூல்களாதலின், அவற்றை அறநூல் என்பது தமிழர்க்கு எதிர்மறைக் குறிப்பாம்.

## 11. நாற் பொருட் பாகுபாடு.

ஆரியர் சிந்துவெளியில் தங்கியிருந்தபோது, இயற்கைத் தோற்றங்களையும் ஐம்பூதங்களையும் உணவுப் பொருள்களையுமே தெய்வங்களாக வணங்கி வந்தனர். சோமம் என்னும் ஒரு கொடிச் சாற்றுமதுவும் தெய்வமாக வணங்கப் பட்டது. விடியற்கால ஒளியை உஷா என்றும், கதிரவன் எழுமுன் அதை ஸவிதா (ஸாவித்ரீ) என்றும், எழுஞ் செங்கதிரவனை அருண என்றும், எழுந்த கதிரவனைச் சூர்ய என்றும், எழுகை உச்சிச் செலவு விழுகை ஆகிய முந்நிலை இயக்கங் கொண்ட கதிரவனை விஷ்ணு என்றும், பின்னர்ப் பன்னிரு மாதம் அல்லது ஓரை பற்றிச் சூரியனைப் பன்னிருவர் ஆதித்தர் என்றும், இங்ஙனம் ஒரே சுடரை அறு தெய்வமாக வணங்கியது, அவரின் மதிவளர்ச்சியில்லா நிலையைக் காட்டும்.

அவருக்குக் கோயிலுமில்லை; குளமுமில்லை. விலங்கைக் காவு கொடுக்கும் வேள்வித் தூணே கோயில்.

www.thamizham.net - Free E book No 7454

இறந்தபின் உயிர்கள் கூற்றுவன் உலகத்தையும் கதிரவன் உலகத்தையும் திங்கள் உலகத்தையும், அடையும் என்பதே, அவர் மறுமைக் கொள்கை. கடவுளை அறியாததனுல், வீடுபேற்றுக் கருத்தே அவருக்கிருந்ததில்லை.

தமிழரோ முதல் மாந்தனினத்தாராய்க் கி.மு. ஓரிலக்கம் ஆண்டு கட்கு முன்பே குமரி நாட்டில் தோன்றி, கி. மு. ஐம்பதினுயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் வளர்த்து, கி.மு. பத்தாயிரம் ஆண்டு கட்கு முன்பே பல்துறை நாகரிகமும் முத்தமிழிலக்கியமும் முழுமுதற் கடவுள் வணக்கமுங் கண்டவர். அதனுல், அறம் பொருளின்பம் வீடென்னும் நாற் பொருட்பேற்றை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர்.

பொருள்கள் அறிவியல்தொறும் வெவ்வேறு பாகுபாடு கொள்ளும். அறம் பொருளின்பம் வீடென்பது அறநூற்பாகுபாடு; அகம் புறம் என்பது பொருளிலக்கண நூற்பாகுபாடு; பொருள் குணம் கருமம் பொது சிறப்பு ஒற்றுமை இன்மை என்பது, ஏரண நூற்பாகுபாடு; சித்து (செத்து) சடம் (சட்டம்) என்பது கொண் முடிவு (சித்தாந்த) நூற்பாகுபாடு. இங்ஙனமே ஏனையவும்.

ஒரே அறிவியற்குள்ளும், அவ்வந்நிலைக்கு அல்லது பிரிவுற் கேற்றவாறு பொருட்பாகுபாடு வேறுபடுவதுமுண்டு. இலக்கண நூலுள், எழுத்ததிகாரத்தில் உயிர் மெய் உயிர்மெய் என்றும், சொல் லதிகாரத்தில் உயர்திணை அஃறிணையென்றும், பொருளதிகாரத்தில் அகம்புறம் என்றும், இனிச் சொல்லதிகாரத்துள்ளும் பெயரியலில் பொருளிடங்காலம் சினை குணம் தொழிலென்றும், வேறுபடல் காண்க.

அகப் பொருளிலக்கணத்தில், தலைவன், பொருள்வயிற் பிரியுங் கால் கூறும் கூற்றுக்களுள் ஒன்று 'மூன்றன் பகுதி' (தொல். அகத். 41) எனப்படும். அது "அறத்தினுற் பொருளாக்கி அப்பொரு ளாற்காமம் நுகர்வேன்" என்பது. இதனுல், அறம் பொருளின்பம் என்னும் பாகுபாடும் அகம்புறம் என்னும் பாகுபாடும் வெவ்வே றென்பதும், இரண்டும் தமிழே யென்பதும் பெறப்படும். இதில் இன்பம் என்றது இம்மைக்குரியதாதலால், வீடு விடப்பட்டது.

தமிழரின் உயர்ந்த மதங்கள், சிவமதம் திருமால்மதம் இவ்விரண் டிற்கும் பொதுவான கடவுள் மதம் என மூன்றும். இவற்றுள் முந்தியது சிவமதம்.

www.thamizham.net - Free E book No 7454

"பாண்டி நாடே பழம்பதி யாகவும்"
"தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே"
"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்"
"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"
என்று மாணிக்க வாசகர் பாடியிருப்பதனுலும்,

பனிமலைக்கும் குமரிமலைக்கும் இடைநடுப்பட்ட தில்லைச் சிற்றம்பலம் பேருலக நெஞ்சத்தாவாக,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல்"

கொள்ளுமுன்பே, பாண்டியனுல் அமைக்கப்பட்டதனுலும், ஆரியர் சிவநெறியைத் தழுவு முன்பு, வடநாட்டில் திருக்குறி (லிங்க) வழிபாடு செய்து வந்த தமிழரைச் 'சிசின தேவர்' என்று பழித்த தனுலும், உருத்திரன் கடுங்காற்றுத் தெய்வமேயாதலாலும், சிவன் வேதத் தெய்வமன்மையாலும், சிவமதம் தமிழ மதமே யென்பது வெள்ளிடை மலை. வீடுபேறு இறைவனிடம் பெறுவதேயன்றிச் சிறு தெய்வங்களிடம் பெறுவதன்று. வடபாற் சென்ற தமிழரே திரவிடராகத் திரிந்தும், வடமேற்கிற் சென்ற திரவிடரே ஆரியராக மாறியும் இருப்பதால், தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமு மாம். ஆதலால், ஆரியரே நாற்பொருட்பாகுபாட்டைத் தமிழர்க் கறிவித்தனரென்பது, பேரன் தன் பாட்டன் திருமணத்திற்குப் பாட்டியமற்றினுன் என்பது போன்றதே.

## 12. திறக்குறளைப் பயன்படுத்தல்.

ஒரு கொடிய நோய்க்கு ஒரு மருத்துவர் சிறந்த மருந்து காணின், அதை, நோயாளி உண்டாலொழியக் கண்டாலுங் கொண்டாலும் பயனில்லை. அது போன்றே, ஆரிய ஏமாற்றினின்று தப்புவதற்குத் திருவள்ளுவர் வகுத்த சிறந்த முறையைக் கைபாளாது, ஆண்டு தோறும் அவர் பெருமையையோ அவர் நூற்சிறப்பையோ அவை யோர் மகிழ அடுக்கிக் கூறிப் பயனில்லை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு." குறள் 423

என்பது ஓர் அறிவுத்துணுக்கு.

www.thamizham.net - Free E book No 7454

வரலாற்றறிவும் மொழியாராய்ச்சியும் இல்லாத பண்டைக் காலத்தில், தென்னாடு வந்த ஆரியரான பிராமணர், தம்மை நிலத் தேவரென்று மூவேந்தரையும் ஏமாற்றினர். அவ்வேந்தரும் அதை நம்பி அவர் ஏவியதை இயற்றினர். அதைப் பொதுமக்களும் பின் பற்றினர்.

ஆயின், ஆங்கிலராட்சியும் அறிவியற் கல்வியும் கண் திறந்த பின்னும், நயன்மைக் கட்சித் தலைவர் கால் நூற்றாண்டு இன முன்னேற்றத் தொண்டு செய்தபின்னும், மறைமலையடிகள் தனித் தமிழியக்கங் கண்ட பின்னும், ஆரிய மொழியாராய்ச்சியுண்மைகள் வெளிப்பட்டபின்னும், தி. மு. க. ஆட்சியும் தவத்திருக் குன்றக்குடி யடிகளின் அருள்நெறித் திருக்கூட்டமும் ஏற்பட்ட பின்னும், மருத்துவமும் ஏரணமும் வரலாறும் ஞாலநூலும் கற்றபின்னும், பிறநாடு சென்று மீண்ட பின்னும், பிராமணரை நிலத்தேவரென்று கொள்ளாவிடினும் பிறப்பாலுயர்ந்தவரென்று நம்பியும், மறுமையிற் பிராமணக் குலத்திற் பிறக்க வேண்டுமென்று விரும்பியும், பகுத்தறிவிற்குச் சிறிதும் ஒவ்வாத பிராமணர் நடிப்பை எண்ணிப் பாராதும், மானமழிந்து மதிகெட்டுத் தாம் மக்கட்டன்மை யிழப்பதுடன், தம் முன்னோர்க்கு இழிவும் பின்னோர்க்கு அழிவுந் தேடும் போலித் தமிழர், மக்கட் பெருக்கமும் உணவுத் தட்டும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில், இருப்பதினும் இல்லாமையே மேலாம்.

தமிழன் எத்துணை நாகரிகமுங் கல்வியுந் துப்புரவும் ஒழுக்கமும் தோற்றப் பொலிவும் செல்வமும் அதிகாரமும் உயர்வும் உடையவனாயினும், பிராமணனொடு தன் இல்லத்திலோ அவனில்லத்திலோ உண்டாட்டிற் கலந்து கொள்ள முற்றுந் தகுதியற்றவன்போல் இருக்கின்றான்.

பிராமணன் உண்டிச் சாலையில் அல்லது ஒரு பொதுவிடத்தில், பிராமணருந் தமிழரும் கூடியுண்ணலாம்; ஆயின், பிராமணன் இல்லத்தில் அங்ஙனம் உண்பதில்லை.

தமிழருள் உயர்ந்த மரக்கறி வெள்ளாளன் இல்லத்தில், பொற் கலத்தில் நீர் அல்லது பால் அன்பளிப்பாகக் கொடுப்பினும் பிராமணன் குடியான். ஆயின், அவரினும் மிகத் தாழ்வாகக் கருதப் படும் இடைச்சி, அல்லது தன்னை இடைச்சியென்று சொல்லிக் கொள்பவள், தன் பழைய மட்கலத்தில் தன்வீட்டுத் தண்ணீரைக் கலந்து கொடுக்கும் தயிரையோ, வானமுதம் போற் கடுவிலைக்கும்

www.thamizham.net - Free E book No 7454

வாங்கிக் குடிப்பான். அதையும், அவள் வீட்டிற்குள்ளிருந்து குடிக்க மறுப்பான்.

தாழ்த்தப்பட்டவர் தவிர மற்றத் தமிழர் யாராயினும், அவல், கடலை, பொரி, அப்பம் (ரொட்டி) விற்பின், பிராமணன் தன் இனத்தான் விற்பது போன்றே கருதி வாங்குவான்.

இன்குடிப்பும் தண்குடிப்பும் தாழ்த்தப்பட்டவன் புட்டியில் அடைப்பினும், பிராமணன் வாங்கத் தவறான். ஒரு தமிழனும் ஒரு பிராமணனும் இளமை முதல் முதுமைவரை எத்துணை நெருங்கி நட்பாடினும், உண்டி வேளையில் மட்டும் அந்நட்பு முற்றும் நீங்கி விடும். இதை இக்காலத்தும் பிராமணன் உயர்வாகக் கருதலாம். ஆயின், இது அநாகரிகமேயன்றி உயர்வாகாது.

பிராமணன் தமிழன் இல்லத்தில் ஒருமுறை யுண்ணினும் அவன் உயர்வு போய்விடுமென்பதும், அதன்பின் விலைக்கன்றி இலவசமாகத் தமிழன் உணவளியான் என்பதும், பிராமணனுக்குத் தெரியும். அதனால்தான், நிலையாகப் பிராமணன் வாழவும் தமிழன் தாழவும் தன்குலக் கட்டுப்பாட்டை இறுகக் கடைப் பிடிக்கின்றான். இதனால், பிராமணன் உண்டிச் சாலையில் திருப்பதியிற் போற் பணங் குவிகின்றது; பிராமணன் இல்லாத ஊரில், ஒரு பிராமணனுக்கு இலவச வீடும் நிலமும் வாழ்க்கைப் பொருளுங் கிடைக்கின்றன.

இதை ஈகை அல்லது ஒப்புரவொழுகல் எனச் சிலர் கருதலாம். இதனால் தமிழ இனத்திற்கு நிலையாக நேரும் மானக் கோட்டையும் அடிமைத்தனத்தையும் அகக்கரண வளர்ச்சித்தடையையும் நோக்குதல் வேண்டும்.

தமிழன் முதன்முதல் உலகில் நாகரிக விளக்கேற்றி வைத்தவன்; பகுத்தறிவடிப்படையில் மொழியை வளர்த்துப் பொருளுக்கும் இலக்கணங் கண்டவன்; கண்காணாததைக் காணவும் காது கேளாததைக் கேட்கவும் நெற்றிக் கண்ணை வளர்த்துக் கொண்டவன்; இறப்புநாளை முன்னரே அறிந்து பணிமுடித்து அணியமாகி, மகிழ்ச்சியொடு உறவினரிடம் விடைபெற்றுச் சென்றவன்.

கடந்த மூவாயிரம் ஆண்டாக, தமிழன் பிறப்பில் தாழ்ந்தவன் என்று சொல்லிச் சொல்லி அஃறிணையாக்கப்பட்டு விட்டதனால், மூத்த தலைமுறையைச் சேர்ந்த தமிழருள் நூற்றிற் கெழுபத்தைவர் பகுத்தறிவை யிழந்து விட்டனர்.

www.thamizham.net - Free E book No 7454

" பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" குறள். 972
" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" „ 505
" நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றான் ஆகுங் குலம்". நாலடி. 195

செல்வன், தவஞ்செய்தோன், கற்றோன், உழைப்பாளி, அதிகாரி என்று பெயர் பெறுவதனாலன்றி, பிறப்பாற் சிறப்பில்லை யென்பது இதன் பொருள்.

ஒருவர் அல்லது ஓரினத்தார் தம் முன்னோரானும் பெருமை பெறலாம். தமிழரின் முன்னோர் புறப்போராரகவும், ஆரியரின் முன்னோர் இரப்போராரகவும் இருந்ததனால், தமிழரே ஆரியரினும் உயர்ந்தோராவர்.

இற்றையுலகில், தூய வெள்ளையர் ஐரோப்பியரும் அவர் வழியினருமாவர். அவருக்கு நேர்மாறாக இருண்ட கறுப்பர் ஆப்பிரிக்கர். ஆயினும், ஆப்பிரிக்கர் வெண்ணிறம்பற்றியோ, தம்மை நாகரிகப்படுத்தினவர் என்பதுபற்றியோ, ஐரோப்பியரை உயர்வாகவும் தம்மைத் தாழ்வாகவுங் கருதுவதில்லை. எல்லா வகையிலும் ஆப்பிரிக்கரினும் உயர்வான தமிழர் ஏன் கையுங்காலுமாக வந்து தம்மையிரந்தவரும் தம்மாற் புரக்கப்பட்டவரும் நாகரிகப்படுத்தப்பட்டவரும் சின்னஞ் சிறுபான்மையருமான அயலாருக்குத் தாழ்ந்து நிற்றல் வேண்டும்?

இங்கிலாந்தில், பொதுமக்கள் (Commons), பெருமக்கள் (Lords) என இருவகுப்பார் இருப்பினும், பதவியினாலும் அரசனதிகாரத்தினாலும் பொதுமக்களும் பெருமக்களாகின்றனர். இங்கே இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் தமிழரனைவரும் கதிரவனுந் திங்களுமுள்ள காலமெல்லாம் பிராமணனுக்குத் தாழ்ந்தவரென்பது, பகுத்தறிவிற் கொவ்வாததும் வாழ்நாட் சிறை போன்ற கடுந்தண்டனைக் கேற்றதுமான குற்றமேயாகும்.

நெற்றிக் கண்ணைத் திறந்தாலுங் குற்றம் குற்றமேயென்று நக்கீரர் போன்று,

" இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான் "

www.thamizham.net - Free E book No 7454

என்று திருவள்ளுவர் கூறியிருப்பதால், அவர் போன்று திடநெஞ்சும் நடுநிலையும் உள்ளவரேயன்றி, தொடை நடுங்கிகளும் வையாபுரிகளும் திருக்குறளை ஆராயவோ பயன்படுத்தவோ முடியாது. ஆதலால், வையாபுரிகளையும் வாய்மைத் தமிழரையும் பிரித்தறிதல் வேண்டும்.

## 13. தமிழாரியப் போராட்டம்.

செங்குட்டுவ கனகவிசயர் போர் பதினெண் நாழிகையும், பாண்டவர் கௌரவர் போர் பதினெண்நாளும், இராமஇராவணர் போர் பதினெண் மாதமும், தேவரசுரர் போர் பதினெண் ஆண்டும் நடந்தனவென்று சொல்லப்படும். ஆயின், தமிழாரியப் போரோ பதினெண் நூற்றாண்டு நடந்து வந்தும் இன்னும் முடிந்த பாடில்லை.

"ஆரியம் நன்று; தமிழ் தீது" எனவுரைத்து, நக்கீராற் சாவவும் எழவும் பாடப்பட்ட குயக்கோடன் காலத்திலிருந்து தமிழாரியப் போர் நடந்து வருகின்றது.

கடவுள் மக்களெல்லாருக்குந் தந்தை. எல்லாரும் அணுகி தத்தம் தாய் மொழியிற் போற்றி வழிபடலாம். திருத்தமாகப் பேசும் மக்கள் மொழியைவிட, திருந்தாத மழலை பேசும் குழந்தைகள் மொழியே பெற்றோர்க் கின்பம் பயக்கும். அங்ஙனமே, கற்றோர் புகழும் புலமைச் செய்யுளைவிட, கல்லார் புகலும் எளிய உரைநடையே இறைவனுக்கு இன்பமாம்.

இந்திய மதங்களுட் சிறந்த சிவமதம் திருமால் மதமும், தமிழர் கண்டவை என்பது முன்னரே கூறப்பட்டது. குறிஞ்சிநில முருகன் வணக்கத்தினின்று சிவமதமும், முல்லைநில மாயோன் வணக்கத்தினின்று திருமால் மதமும், தோன்றின.

உருத்திரன் என்னும் ஆரியத் தெய்வமும் சிவன் என்னும் தமிழத் தெய்வமும் வெவ்வேறு; அங்ஙனமே, விஷ்ணு என்னும் ஆரியத் தெய்வமும் திருமால் என்னும் தமிழத் தெய்வமும் வெவ்வேறு.

சிவ வழிபாடும் திருமால்வழிபாடும் தமிழ்நாட்டில் தொன்று தொட்டுத் தமிழிலேயே நடைபெற்று வந்தன. பிராமணர் முதுகுடுமிப் பெருவழுதி போன்ற பேதை வேந்தரை ஏமாற்றி, தமிழ்ப் போற்றி நூல்களை ஆரிய ஆகமங்களாக மொழி பெயர்த்துக் கொண்டு, தமிழை

www.thamizham.net - Free E book No 7454

வழிபாட்டிற்குத் தகாததென்று தள்ளி, பிராமணரே சமற்கிருதத்தில் கோவில் வழிபாடு நடத்திவருமாறு செய்து விட்டனர்.

" மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும் "

என்று மாணிக்கவாசகர் பாடியிருத்தல் காண்க.

மகேந்திரம் என்பது, இலங்கைக்கு மேற்கில் பொதிய மலைக்குத் தென்பால் இந்துமாவாரியில் மூழ்கிப்போன ஒரு மலைத் தீவு. அதிற் சிவபெருமான் போற்றிநூல் தோற்றுவித்தது ஆரியர் வருகைக்கு முந்திய நிகழ்ச்சி. அத்தீவின் தமிழ்ப்பெயர் இறந்து பட்டது.

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் கிறித்தவ மதத்தைப் பரப்பியவர் உரோமாபுரிக் கிறித்தவக் குரவராதலால், அவர் தம் இலக்கிய மொழியாகிய இலத்தீனிலேயே வழிபாடு நடத்தினர். ஆயின் இத்தாலியரல்லாதவரெல்லாரும் நாளடைவில் தத்தம் தாய்மொழியிலேயே வழிபாட்டை நடத்திவருவாராயினர்.

இங்கோ, நாடு தமிழ்நாடு; மக்கள் தமிழ் மக்கள்; மதம் தமிழ மதம்; கோவில் தமிழர் கட்டியவை; தெய்வப்படிமை தமிழர் சமைத்தவை; தெய்வம் தமிழர் தெய்வம்; திருக்கோவில் உடைமைகளெல்லாம் தமிழர் தந்தவை; மக்கள் பேசும் மொழி தமிழ். இங்ஙனமிருந்தும், பிராமணர் தமிழ் வழிபாட்டைத் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழருள் திரவிடரும் அடங்குவர். இனி, மராட்டிய மன்னரும் பிறரும் கட்டிய இரண்டொரு கோவில்களிருப்பினும், அவையும் தமிழர் தந்த வரிப்பணங் கொண்டே கட்டியவையென்றறிதல் வேண்டும்.

இது கோவரசு நீங்கிய குடியரசுக் காலம். தி.மு.க. அரசு எல்லா நிலைமைகளையும் தீர ஆய்ந்து, தமிழ்த் திருமணத்தைச் சட்டபடி செல்லவைத்தது போன்றே, தமிழ் வழிபாட்டையும் திருக்கோவில்களிற் புகுத்தியது. இது தமிழ் நாட்டரசு செய்ய வேண்டிய தலையாய கடமையே.

ஆயின், தமிழரை என்றும் தம் அடிப்படுத்தவே திட்டமிட்டுள்ள பிராமணர், இக்காலத்தில் நிலத்தேவர் என்று தம் உயர்வை நாட்ட முடியாமை கண்டு, தம் இலக்கியக் கலவை மொழியையே கருவியாகக் கொண்டு, சமற்கிருதம் தேவமொழியென்றும் அஃதொன்

www.thamizham.net - Free E book No 7454

றிலேயே வழிபாடு நடத்தல் வேண்டுமென்றும் அதுவே தொன்று தொட்ட வழக்கென்றும், தில்லி மேலுயர் மன்றத்தில் வழக்காடி வென்று விட்டனர்.

பண்டைய இந்திய வரலாறும் தமிழ்நாட்டு வரலாறும் செவ்வையாகவும் உண்மையாகவும் வரையப்படாமையால், இந்திய மேலுயர் மன்றம் செய்த தீர்ப்புச் செல்லாது. இவ்வழக்கு உலக முதன்மொழியாகிய தமிழும் தமிழர் பல்கலைநாகரிகமும் பற்றியதாதலால், ஒன்றிய நாட்டினங்களின் கூருன (ஏக்கிலுள்ள) உலக அறமன்றத்திற்கும், 'இதைத் தீர்க்குந்' தகுதியில்லை.

எந்நாட்டிலும் எக்காலத்திலும் வழிபாட்டிற்குத் தகுந்தமொழி தாய்மொழியே. ஒருவன் தன் உள்ளத்திலுள்ளவற்றைத் தன் தாய் மொழியிலேயே உணர்த்த முடியும். தேவமொழியென்று ஒரு மொழியுமில்லை. ஒரு மொழியைத் தேவமொழியென்று சொல்லும் பூசகன், தெய்வத்திரு முன்பு நின்று தெய்வத்தையே துணிந்து ஏமாற்றித் தீராத் தீவினை செய்கின்றுன். மன்ருட்டின் வலிமை மன்ருடுவானின் உள்ளத் தூய்மையையும் திண்மையையும் பொறுத்ததேயன்றி, அவன் ஒலிக்கும் ஒலியின் வன்மையைப் பொறுத்ததன்று. ஒலிக்கே வலிமை யுண்டெனின், நூற்றுக்கணக்கான கழுதைகளைக் கூட்டி ஒருங்கே கத்தும்படி செய்யலாம். ஏனெனில், கழுதை கத்துதல் போன்ற மூச்சொலிமிக்க வல்லொலி, எந்த மாந்தர் மொழியிலுமில்லை.

தி. மு. க. அரசு இனிக் கடைப்பிடிக்க வேண்டிய வழி ஒன்றே. அது வருமாறு:—

தமிழுக்கும் சமற்கிருதத்திற்கும் பொதுவான 'காலம்' 'உலகம்' போன்ற ஐந்நூறு அடிப்படைச் சொற்களைத் தொகுத்து, அவற்றிற்கு வேரும் வரலாறும், தவத்திருக் குன்றக்குடி அடிகள் தலைமையில்; மாண்புமிகு கல்வியமைச்சர் பர். (Dr.) நாவலர் இரா. நெடுஞ்செழியனுர், அரசவையவர் முத்தையா (செட்டியார்) பர் (Dr.) மணவாளராமானுசம், பர் (Dr.) வ. சுப. மாணிக்கம், சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் பேரா. திரு. ஞானசம்பந்தனுர், வய்வர் இராமசாமி (முதலி)யார், சென்னை உயர்மன்றத் தலைமைத் தீர்ப்பாளர் உயர்திரு. வீராசாமி (நாயுடு) ஓய்வு பெற்ற புதுவைக் கல்வித்துறை இயக்குநர் இரா. பெருமாள் (முதலியார்) எம். ஏ; எல்.டி.,

www.thamizham.net - Free E book No 7454

யோரைக் கொண்ட நடுவர் குழுமுன், மொழியாராய்ச்சித் தமிழ்ப் புலவர் கூற, தென்னாட்டிலும் வட இந்தியாவிலும் வெளிநாடுகளிலு முள்ள தலைமைச் சமற்கிருதப் பேராசிரியர் வந்து அவற்றை மறுத்து, அச் சொற்கள் சமற்கிருதச் சொல்லேயென்று நாட்டல் வேண்டும். அதன்பின் நடுவர் குழுத் தீர்ப்புக்கூறல் வேண்டும். அத்தீர்ப்பு உலக முழுதுஞ் செல்ல வேண்டும். அதுவே தமிழாரியப் போராட் டத்தின் உறுதியும் அறுதியும் இறுதியுமான முடிபாயிருத்தல் வேண்டும்.

இங்ஙனஞ் செய்யாக்கால், எல்லா அடிப்படைத் தமிழ்ச் சொற்கும், பொருந்தப் பொய்த்தலாகவும் பொருந்தாப் பொய்த்த லாகவும் மூலமும் பொருட் காரணியமுங்கூறி, உலகுள்ள அளவும் பிராமணர் தமிழரை ஏமாற்றிக் கொண்டேயிருப்பர். தமிழின் தாழ்வு சமற்கிருத உயர்வு; தமிழன் தாழ்வு பிராமணன் உயர்வு என்ற அடிப் படையிலேயே எல்லாம் நிகழும். வையாபுரிகளும் பகுத்தறிவிலிகளும் தமிழறியா மேனாட்டாரும் என்றும் பிராமணர்க்குத் பக்கத் துணை யாகவே நிற்பர். தமிழனுக்குப் பொழுது விடியாது. காலஞ் செல்லச் செல்ல அடிமைத்தனம் பெயர்க்க முடியாதவாறு ஆழ வேரூன்றி விடும். ஆதலால், விழித்திருந்து இன்றே இன்னே விடுதலை பெறல் வேண்டும்.

> " *தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்*
> *முதலமைச்சாய் வருதல் வேண்டும்.*
> *தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில்*
> *வாராது தடுத்தல் வேண்டும்.*
> *நமை வளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனும்*
> *தமிழல்லால் நம் முன்னேற்றம்*
> *அமையாது சிறிதும் இதில் ஐயமில்லை*
> *ஐயமில்லை அறிந்து கொண்டோம்.* "
>
> *—பாரதிதாசன்.*

மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதியென்னும் அருட் செல்வனார் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தை ஏற்றுக்கொண்டாமையால், பாரதிதாசன் கனவு நிறைவேறிவிட்டது.

> " *புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை*
> *வெளியிட்டு வேறுதல் வேண்டும்—வழிபெருங்*
> *கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்*
> *புண்வைத்து மூடார் பொதிந்து.* " *—குமரகுருபரர்.*

www.thamizham.net - Free E book No 7454

" ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர்ஒன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்." —பழந்தனிப்பா.

வையக மெல்லாம் வடமொழியைப் போற்றினும்
மெய்யகஞ் தென்மொழி மேற்று.

தமிழ்நாடு இன்னும் விடுதலை பெறவில்லை. ஆங்கிலராட்சி நீங்கினவுடன் விடுதலை வந்து விட்டதென்பது, வரலாறறியாதார் குருட்டு நம்பிக்கையே. உண்மையான கொடிய அயலாட்சி பிராமணியம். இந்திக் கட்டாயம் நீங்கி, ஆங்கிலமும் நிலையான இந்திய ஆட்சி மொழியாகி தமிழ்நாட்டுத் திருக்கோவில்களிலெல்லாம் தமிழே வழிபாட்டு மொழியாகி நாட்டு வாழ்த்துத் தமிழிலேயே பாடப் படும்போதுதான், தமிழ்நாடு விடுதலையடைந்ததாகும்.

இன்று தமிழ்நாட்டைக் கெடுப்பவை பல்குழுவும் உட்பகையும் கொல்குறும்புமே. இம் மூன்றும் திருவள்ளுவர் காலத்திலேயே தீங்கு செய்யத் தொடங்கி விட்டன. அதனாலேயே, அவர்

" பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு" குறள் 735.

என்று எச்சரித்தார்.

## 14. வள்ளுவர் கோட்ட அமைப்புப் பற்றிய கருத்துக்கள்

1) திருவள்ளுவர் உலக முழுதும் ஒப்புயர்வற்ற தெய்வப் புலவராதலின், அவர் கோட்டம் திருவள்ளுவர் கோட்டம் என்றே பெயர் பெறுதல் வேண்டும்.

2) தமிழ் மறையாக இயற்றியதே உலகப் பொதுமறையானதென்பதை, தேர்ச்சக்கரத்தில் உள்பரப்பில் தமிழ்மறை என்றும், வெளிவிட்டத்தில் உலகப் பொதுமறை என்றும் பொறித்துக் காட்டலாம்.

3) அறத்துப்பால் இல்லறம் துறவறம் என இருவியல் கொண்டிருப்பதால், அறத்தைக் குறிக்கும் கருங்கல் தேர்த்தட்டும் இருபடை கொண்டிருத்தல் நன்று.

4) இல்லறத்தினாலும் பேரின்ப வீடு பெறலாமென்று திருவள்ளுவர் கூறியிருப்பதால், கருங்கல் தட்டின் இருபடையிலும் சுற்றிவர ஓரத்தில் பச்சை வண்ணக் கரையிடலாம்.

www.thamizham.net - Free E book No 7454

பச்சை கண்ணிற்கினிய நிறமாதலால் பேரின்பத்தைக் குறிக்கும்.

5) தேர்க்கும்பத்தில் நாற்புறமும் 'அன்பு', 'அறிவு', 'அமைதி' என்னும் சொற்களுள் ஒன்றைப் பொறிக்கலாம்.

## 15. முடிபு.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்", "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்பன தமிழர் கொள்கையாதலால், அவருக்கு வேற்றினத்தார் மீது வெறுப்பில்லை. ஆயின், பிராமணரோ, ஒண்ட வந்த தெய்வம் ஊர்த் தெய்வத்தைத் துரத்தினதுபோல், தொன்று தொட்டுக் கட்டுப்பாடாகத் தமிழுக்குந் தமிழர்க்கும் மாறுகவே வேலை செய்து வந்திருக்கின்றனர். இனிமேலாயினும், தம் முன்னோரின் தவற்றையுணர்ந்து அவர் ஏமாற்றுக்கலையையுந் திருவிளையாடலையுந் தொடராது, உடன்பிறப்புப்போல் தமிழரொடு ஒன்றி வாழ்ந்து தமிழைக் காப்பாராக. அங்ஙனந்திருந்தின், கல்வியிலும் அலுவற் பேற்றிலும் வகுப்புவாரிப் படிநிகராண்மை (பிரதிநிதித்துவம்) தலை தாழ்ந்து தகுதியே தலையெடுக்கும். தமிழ்நாடு தழைத்தோங்கும் மேலையரும் வியக்கும் அறிவியல் இறும்பூதுகளும் (அற்புதங்களும்) நிகழும்.

## 16. வாழ்த்து.

1. ஒள்ளியநல் லறம்பொருளும் இன்பவீடும் இனியென்றும்
   உலகுறத் தமிழருக்கென் றுருவான
   தெள்ளுதமிழ்த் திருக்குறளைத் தீட்டியுயர் திருவாரூர்த்
   தேர்வடிவிற் சூழ்வுதிகழ்ந் திலகுதிரு
   வள்ளுவர்நற் கோட்டமதை வகுத்தமைத்தான் கரிகாலன்
   வழியனெனத் தகுகருணா நிதியென்னும்
   வள்ளல் அருட் செல்வன்தென் னிலத்தலைமை வாழிவாழி
   வையகமே போற்றும்வகை நீடூழி.

2. தமிழ்நாட்டில் முதன்முதலாய்த் தலைசிறந்த தமிழ்ப்புலமை
   தாங்குமயற் சொற்பெயரைத் தள்ளியபின்
   நிமைகாக்குங் கண்ணெனவே நீவந்ததமிழ்ப் பெயரேற்ற
   நெடுஞ்செழியன் எனுங்கல்வி யமைச்சன்முன்
   தமிழ்காத்த பாண்டியன்போல் தன்கடமை யென்றுணர்ந்து.
   தமிழாட்சி மொழியாக மாணவரின்
   சுமைநீக்கி யிருமொழிக்கல் வியையமைத்தான் சோர்விலாச்

www.thamizham.net - Free E book No 7454

3. முன்பருமைப் பெற்றோரே யிட்டதெனு தொருமருங்கு
மொழிபெயர்த்தே இராமையா எனும் பெயரை
அன்பழகன் என்றழகா யமைத்தொருபேர் வழிகாட்டி
அவலவெந்நோய் தீர்க்குமுடல் நலத்துறையில்
பண்புமிகு மாணவரும் பண்டுவரும் படிப்படியாய்ப்
பைந்தமிழில் நலத்துறையை மாற்றுதற்கு
நன்பணிசெய் அமைச்சனுடன் எம்பெருமான் துணையிருக்க
நானிலத்து நூற்றாண்டு வாழியரோ.

4. பொதுப்பணித் துறையமைச்சன் சண்முகன்நற் சீராளன்
பொறுப்புடன் கோட்டத்தைப் புனைந்தமைக்க
விதப்புறுங் கண்காணச் சூழ்ச்சியகன் வினைதேர்ந்த
வேங்கடா சலபதியுங் கூடுபெரு
மிதத்துடன் பணிசெய்து கம்மியரும் ஏவலரும்
மிடுக்கொடு பல்லாண்டு வாழியரோ!
மதர்ப்புறு தமிழருடன் பிறநாட்டார் ஆராது
மதிப்பொடு நாள்தோறுங் கண்டிடவே.

5. வாழ்க வள்ளுவன் வான்புகழ் என்றுமே
வீழ்க வண்பெயல் விளைக பல்பயிர்
சூழ்க குறள்நெறி சோர்க பகையெலாம்
ஆழ்க நடுநிலை ஆயுந் துறைகளே. O

## செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறிமுறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளியிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்து தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் 'தென்மொழி' சென்னை-5 என்னும் முகவரிக்கே விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனைப் பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—74
சென்னை-5.

பெருஞ்சித்திரன்.
அமைப்பாளர்.

www.thamizham.net - Free E book No 7454

ஒரு தூளுரை !

# 'புதுப் பெரியவாளி'ன் புளுகுரை!

## பார்ப்பனக் குறும்பு இன்னும் விட்டபாடில்லை.

0 அறிவியல் மிக வளர்ச்சி பெற்ற இந்தக் காலத்திலும் ஆரியப் புரட்டல்கள் அடங்கவில்லை.

0 'இந்து மதமும் சமசுக்கிருத மொழியும் உலகம் தோன்றியிராத முன்பிருந்தே இருந்து வருகின்றன' என்கிறார் காஞ்சிப் 'புதுப் பெரியவாள்!'

0 ஆரிய அடிமைகளும், பார்ப்பனப் பாதந்தாங்கிகளும் என்றைக்குத்தான் விழிப்பார்களோ?

காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் 'மன்னர்'களைப் போல் தொடர்ந்து வருபவர்கள். ஒவ்வொரு 'பழைய கிழட்டுப்' பெரியவாளும் 'சாவ'தற்கு முன் ஒரு 'புது'ப் பெரியவாளைத் தோற்றுவிப்பார். அப்படிப்பட்ட புதுப் பெரியவாள் ஒருவர் இப்பொழுது இந்தியா முழுவதும் ஊர்வலம் வருகிறார். அவர் போகின்ற இடங்களிலெல்லாம் ஆரியக் கருத்துகளை அப்பட்டமாக வேரூன்றி வருகின்றார். மதம் என்னும் பெயரால் மூட நம்பிக்கைகளையும் பார்ப்பனியத்தையும் வேரூன்றச் செய்வதே இவர் கொள்கை. இவரின் மூத்த கிழட்டுப் பெரியவாளைத்தான் அண்மையில் தென்னாடு வந்த இந்திரா காந்தி வணங்கி வாழ்த்துப் பெற்றார். இந்தப் புதுப் பெரியவாளும் கிழட்டுப் பெரியவாளுக்கு ஒன்றும் சளைத்தவரல்லர்.

இவர் காளிக் கோட்டம் என்ற கல்கத்தாவில் அண்மையில் ஒரு கூட்டத்தில் 'சிருஷ்டி என்பது அநாதியானது. அதுபோல் ஹிந்து தர்மமும் அநாதி காலந் தொட்டே வேரூன்றி வந்துள்ளது." என்றும், "ஸம்ஸ்கிருத மொழியும் அநாதியான மொழி. இந்த மொழியைப் பிற மொழிகளுடன் ஒப்பிடும்போது, அவை மிகவும் இளையவை. ஒவ்வொரு கால கட்டத்தில் அவசியத்திற்குரிய வகையில் உருவான பிற மொழிகளுக்கும், கால நிர்ணயத்திற்கும் அப்பாற்பட்ட ஸம்ஸ்கிருத மொழிக்கும் வரலாற்றின் அடிப்படையில் மிகுந்த வித்தியாசம் உண்டு. மொழி என்பது மனித உள்ளங்களைச் செம்மைப் படுத்தத் தோன்றிய ஒரு கருவி என்கிற நோக்கில் ஸம்ஸ்கிருதத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உள்ளது. எனவே அந்த மொழியைக் குறுகிய கண்ணோட்டங்களைத் தவிர்த்து அனைவரும் பயின்று ஆத்ம லாபம் பெற முனைய வேண்டும்'—என்று கூறியுள்ளார்,

நாம் இந்தப் புதுப் பெரியவாளைக் கேட்கிறோம்: இது போன்ற 'கதை'யளப்புகளை'யெல்லாம் விட்டுவிட்டு, இந்து சமயமும் சமசுக்கிருத மொழியும் கால வரையறைக்கு அப்பாற்பட்டதென்பதை வரலாற்று அடிப்படையில் மெய்ப்பிக்க முடியுமா? இங்குள்ள ஆரியக் குஞ்சுகள் இதை அவர் காதுகளில் போட்டு விடை பெறுமா? அல்லது தினமணி முண்டங்கள் இந்த வேலையைச் செய்யுமா?

www.thamizham.net - Free E book No 7454

கோவை நண்பரும், தாங்களும் நினைக்கலாம். ஆனால் நான் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவன் அல்லன். வேறு எந்தக் கட்சியையும் சேர்ந்தவனும் அல்லன். தமிழையே தமது மூச்சாகக் கொண்ட அறிஞர் அண்ணாத்துரையை, அதுவுமன்றி மறைந்துவிட்ட ஓர் அறிஞரைப் பற்றிக் கோவை நண்பர் ஏதோ அரசியல் காழ்ப்புக் கொண்டு மிகவும் இழிவான, மதிப்பற்ற முறையில் சாடித் தரமில்லாத மடலை எழுதியிருப்பதால் மனத்துயரம் அடைந்து இம்மடலை எழுதினேன். வாழ்க தமிழ். வளம் பெருக தமிழ்நாடு.

தங்கள் அன்பன். கோ. அரங்கநாதன், க.மு;ச.இ.,
வழக்கறிஞர், செங்கம். வ. ஆ.மா.

**0 : 410 :** அன்புள்ள ஐயா, கடந்த திங்கள் தென்மொழி இதழைப் பார்த்த பின்னர்தான் அது சென்னை நகரத்திற்கு மாற்றப் பட்டிருப்பது கண்டேன். கழிபேருவகை கொண்டேன். கடலூரில் இருந்து வெளிவருவதை விடச் சென்னையிலிருந்து வருவதிற் சிறப்புண்டு. எல்லாரும் அதைப்பற்றி நன்கு அறிவர். இவ்விதழின் முகப்புப் பாடலாகிய 'தமிழின்னும் வாழ்ந்ததிங்கே' என்பதினைப் பன்முறை படித்து எனக்குப் பாடமாகி விட்டது. தமிழுணர்ச்சி ஒரு புறம் மலைபோல் உயர்ந்தாலும் மறுபுறம் தாழ்கிறதே மடுப்போல. உணர்ச்சியற்ற மரங்கள் எத்தனையுள்ளன! சொந்த அறிவும் இன்றிச் சொல்லறிவும் இன்றிச் செல்லரித்த மரம் போலன்றோ உள்ளனர்! இன்னும் ஆரிய அடிமையராய் வாழ்வதிலும் உணர்ச்சியின்றித் தாழ்வதிலும்தானே மேம்பாடு கொண்டுள்ளனர். இருந்தாலும் என்றாவது ஒருநாள் உணர்வு கிண்டப் பெற்று எழுவாரெனும் நம்பிக்கை உள்ளது. "அந்த நந்நாள் விரைவில் வரும்; விரைவில் வரும்-எம்மோர், அரசமைத்த செய்தியினை முரசொலித்துக் காட்டும்" என்ற தங்களின் விடுதலைப் பாடல் என் நெஞ்சம் விட்டு நீங்கவில்லை. அந்த நந்நாளுக்காக அணிவகுக்கும் விடுதலைப் படையில் முதல் மறவனாக என் பெயரைத் தர என்றும் அணியமாயுள்ளேன். அப்படை அமைக்கப்படுமா?

மெய். அருண்மொழியன், பெருவயல் (முகவை).

**0 : 411 :** பேரன்பும் அருளும் கெழுமிய ஐயா, நீங்கள் மலைநாடு, சிங்கப்பூர் சென்ற செலவு தமிழர்கள் அனைவரும் சென்ற செலவுக்கு ஈடாக எண்ணுகிறேன் யான்! இஃது ஏனெனில், அனைத்து தமிழின நலனுக்கும் தேவையான செய்திகள், அறிவுரைகள், நிகழ்ச்சிகளையும் எடுத்துத் தமிழர்களுக்குத் தக்க முறையில் படைத்து நீங்கள் கண்ட பட்டறிவுகளை எல்லாரும் பங்கிட்டுக் கொள்ள முடியும் என்பதால்தான். உங்கள் செலவுக் கட்டுரைகளைப் படிக்க ஆவலாக உள்ளோம். நாங்களும் ஆனந்தவிகடனில் மணியன் தீட்டும் செலவுக் கதையைப் படிக்கிறோம். அதிலும் "அவாள்" சரக்குகளை உள்ளடக்கமாக வைத்தே எழுதுகிறார்கள். புரட்சி நாடான வியட்நாமைப்பற்றி எழுதும் போதும் அங்குள்ள செட்டியார்கள் கட்டியுள்ள சுப்ரமணியக் கடவுள் கோயில்களையும், அவர்கள் பார்ப்பனப் பண்பாட்டையும் படம் பிடித்துக் காட்டத் தவறவே இல்லை. எனவே, தென்மொழியில் வரும் உங்கள் கட்டுரை தனித்தமிழ் மணம் கமழ, தமிழர்கள் பண்பாடு மிளிர வரும் என எதிர்பார்க்கிறோம். சிங்கப்பூர் மக்கள் கல்வி, கலை

(அடுத்த பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7454

இலக்கியம், பொருளியல், அரசியல்துறை, பிற துறைகளில் எப்படி வாழ்கின்றனர் என்பதைத் தெளிவாக விளக்கிக் கட்டுரைகள் எழுதுவீர்களென ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். அங்குள்ள மக்கள் எப்படி முன்னேற்றத்துடன் வாழ்கிறார்கள்? அங்குள்ள கூலி உழவர்கள், தொழிலாளர்கள் வாழ்நிலை யாது? அங்குள்ள விலைவாசிகளின் நிலை எப்படி உள்ளது? வறுமை, வேலையின்மைச் சிக்கல்கள் அவண் உண்டா? இல்லையா? அவற்றை அகற்ற அவர்களது அரசு எடுத்த செயல்கள் எவை? தமிழிலக்கிய வளர்ச்சி அவண் எப்படி உள்ளது? பார்ப்பனர்கள் கொட்டம் அங்கு இருக்கிறதா? அங்குள்ளவர்கள நமது தமிழ் நாட்டைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள்? அந் நாட்டுத் தாளிகைகள் நிலை என்ன? திரைப்பட அரங்குகள் எப்படி உள்ளன? திரைப்படக் கலையில் பாலுறவுக்கு அதிக இன்றியமையாமை தருகிறார்களா? நூல்நிலையங்களைப் பற்றிக் கூறுங்கள். இரவலர்கள் அங்கு இருக்கிறார்களா? விலைமாதர்கள் இருக்கிறார்களா? அங்கு என்னென்ன அரசியல் கட்சிகள் உள்ளன? ஆளும் அரசு பொதுவுடைமை அரசா? எனும் செய்திகளையும் தாவும். தனித்தமிழ் பேச எழுத அங்குள்ள தமிழர்கள் விரும்புகிறார்களா? தனித்தமிழியக்க எதிரிகள் அங்கு இருக்கிறார்களா? சிங்கை நாட்டிலிருந்து நமது தமிழர்கள் என்னென்ன செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்நாட்டு மக்கள், தமிழ்த் தொண்டு புரியும் சான்றோர்கள், எழுத்தாளர்கள், பாவலர்கள் நிலை அங்கு எப்படி உள்ளது? அங்குள்ள மருத்துவ மனைகள், தங்கு மாளிகைகள், விளையாட்டு அரங்கம், பூங்காக்கள், குழந்தைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், உயர் பள்ளிகள் பற்றியும் எழுதவும். நன்றி. —திரு. நா. அறிவரசு, திருப்பூர்-2.

**0: 412:** மக்கள் நலம் நாடும் அய்யா! தனித்தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ்நாட்டுப் பிரிவினை, சாதி வேறுபாடற்ற குமுகாய அமைப்பு, ஒழுக்கமுள்ள மக்கள் - ஆகியவற்றுக்காகத் தாங்கள் துவக்கித் தொண்டாற்றி வரும் அமைப்பு விரிவடையவும் தமிழகம் பிரியவும் தங்கள் எண்ணம் ஈடேறவும் என் வேண்டுதல்கள். தங்கள் அமைப்பு படித்தவர்களிடந்தாம் பரவி இருக்கிறதே தவிர படிப்பறிவு இல்லாத சிற்றூர்ப்புற உழவர்களிடம் பரவவில்லை. சிற்றூர்களிலே வாழ்பவர்கள் 100க்கு 80 பேர்கள். தந்தை பெரியார் அவர்களின் உழைப்பால்தான் காமராசர் 9 ஆண்டுகளும் அருட்செல்வர் (கருணாநிதி) 7 ஆண்டுகளும் ஆட்சி செய்ய முடிந்தது. காரணம் பெரியார் அவர்கள் தொடக்கத்தில் கூறியபடி முட்டாள்கள்தாம் என் கட்சிக்குத்தேவை என்பதுபற்றித் தங்களுக்குத் தெரிந்ததே. பெரியார் விட்டுச் சென்ற பணியைத் தாங்கள் துவங்கிச் சிற்றூர் மக்களிடையே கருத்துப் பரப்புதல் செய்தால் இன்றைய நிலையில் நாடு விடுதலை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். இன்று ...மதம், பொருளியல், ஆட்சித்துறை, ஆகியவற்றில் தொல்லைப்படும் உழவர்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம் என்பது என் எண்ணம். தங்கள் எண்ணப்படி நாடு பிரியவும், ஒழுக்கமுள்ள குமுகாயம் உருவாகவும் பாடுபட அணியமாக இருக்கும்,

பெரியார் தொண்டன், து. சண்முகம். வாலாசாநகரம், அரியலூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.

www.thamizham.net - Free E book No 7454